நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**விநாயகபுரத்தில் விவசாயிகளுக்கு இலவச நீர் மேலாண்மைப் பயிற்சி**

சிக்கன நீர்ப் பாசனம், லாபகரமான பயிர் சகுபடி, பயிர் சுழற்சிமுறைகள் தொடர்பான மேம்படுத்தப்பட்ட பயிற்சி, மேலூர் அருகேயுள்ள விநாயகபுரம் நீர் மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

மதுரை மாவட்டம், மேலூர் அருகே விநாயகபுரம் நீர் மேலாண்மைப் பயிற்சி நிலையம் அமைந்துள்ளது. இங்கு, சென்னை, நீலகிரி நீங்கலாக, 30 மாவட்ட விவசாயிகளுக்கும், வேளாண்மை உதவி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் ஒரு மாவட்டம் வீதம், அந்த மாவட்டத்தில் 6 வட்டாரங்களிலிருந்து வட்டாரத்துக்கு ஒரு உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் 5 விவசாயிகள் வீதம் (1:5 என்ற விகிதத்தில்) 6 அலுவலர்கள் மற்றும் 30 விவசாயிகள் என மொத்தம் 36 பேருக்கு ஒரு அணியில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சி நிலையத்தில், நீர் மேலாண்மை தொடர்பான பயிற்சிகளுடன், உற்பத்தியை இரு மடங்காக்கவும், வருமானத்தை 3 மடங்காக்கும் வகையிலும் வேளாண்மைத் தொழில்நுட்பங்கள், வேளாண்மைப் பொருள்களை மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல் தொடர்பாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

வாரத்தில் செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் பயிற்சியில், 3 நாள்கள் நிலைய வளாகத்திலும், ஒரு நாள் மதுரை வேளாண்மைக் கல்லூரிக்கும் அழைத்துச் செல்லப்படுகிறது. பயிற்சி நிலையத்தில், பயிற்சியாளா்களுக்கு தங்குமிடம், உணவு,

போக்குவரத்துக் கட்டணம், பயிற்சி சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. 2015-16 ஆம் ஆண்டுக்கு, மதுரை மாவட்டத்துக்கான முதல் அணிக்கான இப்பயிற்சி 9.6.2015 இல் தொடங்கப்படுகிறது. எனவே, இப்பயிற்சியில் கலந்துகொள்ள விருப்பம் உள்ள விவசாயிகள், தங்களின் பெயர்களை தங்களது பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் மூலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநரிடம் பதிவுசெய்து கொள்ளவேண்டும். மேலும் விவரங்கள் பெற விரும்புவோர், வேளாண்மை துணை இயக்குநர், நீர் மேலாண்மைப் பயிற்சி நிலையம், விநாயகபுரம் - 625 122, மதுரை மாவட்டம், என்ற முகவரியை தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உறையில் அடைத்து விற்கப்படும் அனைத்து உணவுப் பண்டங்களையும் ஆய்வு செய்ய வேண்டும்**

உறையில் அடைத்து விற்கப்படும் அனைத்து விதமான உணவுப் பண்டங்களையும் சோதனைக்கு உள்படுத்த வேண்டும் என தமிழக அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் வலியுறுத்தினார். இதுதொடர்பாக அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை: மேகி நூடுல்ஸில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாக உப்பு, காரீயம் இருப்பது கண்டறியப்பட்டு பெரும்பாலான மாநிலங்களில் அதன் விற்பனைக்கு தடை செய்யப்பட்டுள்ளது. இப்போது தடை செய்யப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது என்றாலும், இத்தனை காலம் இந்த நூடுல்ப்ஸ சாப்பிட்ட குழந்தைகளின் உடல்நலக் கேட்டுக்கு யார் பொறுப்பேற்பது என்ற கேள்வி எழுகிறது. உறையில் அடைத்து விற்கப்படும் உணவுப் பொருள்களில் என்னென்ன வேதிப் பொருள்கள் உள்ளன என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் என்பது பல்வேறு நாடுகளில் நடைமுறையில் உள்ள விதியாகும்.

ஆனால், அதுபோன்ற விதி இந்தியாவில் இல்லை. அதற்காக மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**தமிழகம், புதுச்சேரியில் சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெப்பச் சலனம் காரணமாக, தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் திங்கள்கிழமை தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பெய்யும். ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், திருவள்ளூர் மாவட்டம் புழல், பொன்னேரி, ஆவடி ஆகிய இடங்களில் 20 மி.மீட்டர் மழை பதிவானது. சென்னை மாநகரைப் பொருத்தமட்டில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்.

மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 100, 84 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும். அரபிக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த பகுதியானது, ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக மாற வாய்ப்புள்ளது. இந்தப் புயலால் தமிழகத்துக்கு எந்தவிதப் பயனும், பாதிப்பும் கிடையாது என்றார். கடலூரில் 103 டிகிரி...: தமிழகத்திலேயே கடலூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை அதிகபட்சமாக 103 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவானது.

அதற்கு அடுத்தபடியாக சென்னையில் 102 டிகிரி, பாளை., கரூர் பரமத்தி, வேலூரில் 99 டிகிரி மதுரை, சேலத்தில் 97 டிகிரி ஃபாரன்ஹீட்

அளவுக்கு வெயில் பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**கோவாவில் மேகி நூடுல்ஸுக்கு தடை**

நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்பான மேகி நூடுல்ஸ்ய்க்கு, கோவா மாநிலத்தில் தடை விதிக்கப்பட்டது. இதையடுத்து, நாட்டில் மேகி நூடுல்ஸ்ய்க்கு தடை விதித்த மாநிலங்களின் எண்ணிக்கை 11-ஆக உயர்ந்தது.

இதுதொடர்பாக கோவா முதல்வர் லட்சுமிகாந்த் பார்சேகர் செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது:

கோவாவில், மேகி நூடுல்ஸின் மாதிரிகளை பரிசோதனை செய்ததில், தீங்கு விளைவிக்கக்கூடிய எந்தப் பொருள்களும் அவற்றில் கண்டுபிடிக்கப்படவில்லை.

எனினும், பல மாநிலங்களில் மேகி நூடுல்ஸ்ய்க்கு தடை விதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, கோவாவிலும் மேகி நூடுல்ஸின் விற்பனைக்குத் தடை விதிக்கப்படுகிறது என்றார் லட்சுமிகாந்த் பார்சேகர். முன்னதாக தில்லி, மகாராஷ்டிரம், பஞ்சாப், அஸ்ஸாம், பிகார், மத்தியப் பிரதேசம், தமிழ்நாடு, ஜம்மு - காஷ்மீர், குஜராத், உத்தரகண்ட் ஆகிய மாநிலங்களில் மேகி நூடுல்ஸ்ய்க்கு தடை விதிக்கப்பட்டது.

இத்துடன் முடியவில்லை: மேகி நூடுல்ஸ் விவகாரம் குறித்து மத்திய ஆயுஷ் (இந்தியப் பாரம்பரிய மருத்துவம்) துறை இணை அமைச்சர் ஸ்ரீபாத் நாயக், தில்லியில் கூறியதாவது: மேகி நூடுல்ஸில் காரீயம் காணப்படுகிறது. காரீயம், உடல்நலத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வேதிப்பொருளாகும். அதன் காரணமாகவே, மேகி நூடுல்ஸ்ய்க்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரச்னை, இத்துடன் முடிந்துவிடவில்லை. இதுபோல, உடல்நலத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வேறு பல பொருள்களும் உள்ளன. அவை குறித்து, ஆய்வு செய்து வருகிறோம்

என்றார் ஸ்ரீபாத் நாயக். நூடுல்ஸ் இறக்குமதிக்கு, பஹ்ரைன் தடை: இதனிடையே, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மேகி நூடுல்ஸ்ஸ்க்கு, பஹ்ரைன் தடை விதித்துள்ளது. தரப் பரிசோதனைக்கு குறைவான தொகை: நெஸ்லே இந்தியா நிறுவனம், தனது தயாரிப்புப் பொருள்களின் தரப் பரிசோதனைக்கு குறைவான தொகையை மட்டுமே செலவழித்துள்ளது, தற்போது தெரிய வந்துள்ளது. நெஸ்லே இந்தியா நிறுவனத்தின் சென்ற ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்படி விளம்பரங்களுக்காகவும், விற்பனையை அதிகரிப்பதற்காகவும் ரூ. 445 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், உணவுப் பொருள்களின் தரப் பரிசோதனைக்காக வெறும் ரூ. 19 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளுக்கான சராசரியின்படி, அந்த நிறுவனம் விளம்பரங்களுக்காக ஆண்டுதோறும் ரூ. 300 முதல் ரூ. 450 கோடி வரை செலவழித்துள்ளது. ஆனால், அதே காலகட்டத்தில் தரப் பரிசோதனைக்காக ரூ. 12 கோடி முதல் ரூ. 20 கோடி வரை மட்டுமே செலவு செய்துள்ளது.

**கோழி எழுப்பும் கேள்வி...**

அமெரிக்கக் கோழிக் கறி இறக்குமதிக்கு இந்தியா விதித்த தடை செல்லாது என்று உலக வர்த்தக அமைப்பின் (டபிள்யூ.டி.ஓ.) மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளதால், அடுத்த 12-18 மாதங்களுக்குள் அமெரிக்கக் கோழிக் கறியை அனுமதித்தாக வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்த விவரங்களை விசாரித்து அறிந்தபோது பல அதிர்ச்சியான தகவல்கள் கிடைத்தன. பறவைக் காய்ச்சல் பீதி பரவலாக நிலவியபோது இந்தியா இந்தத் தடையை விதித்தது. இதை எதிர்த்து அமெரிக்கா தொடுத்த வழக்கில் சென்ற ஆண்டு அளிக்கப்பட்ட தீர்ப்பு அமெரிக்காவுக்கு சாதகமாக அமைந்ததால், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் இந்தியா முறையிட்டது. இருப்பினும், அங்கேயும், இந்தியாவின் தடை அறிவியல்பூர்வமற்றது

என்று அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்தியா தொடர்ந்து மேல்முறையீட்டுக்குச் சென்றதன் நோக்கம் பறவைக் காய்ச்சல் பீதி அல்ல. உள்நாட்டில் கோழிக் கறி வணிகம் பாதிக்கப்படும் என்பதால்தான். பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதோடு, கோழி வளர்ப்பின் மூலம் துணை வருவாய் காணும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற கவலையால்தான் இந்தியா மேல்முறையீட்டுக்குச் சென்றிருந்தது. இந்தியா, அமெரிக்காவுக்கான மிகப் பெரிய கோழிக் கறி சந்தை. இந்தியாவில் கோழிக் கறி உண்போர் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு வளர்ந்து கொண்டே போகிறது. கோழிக் கறியின் அளவும் கூடிக் கொண்டே போகிறது. 2014-ஆம் ஆண்டு கோழிக் கறி விற்பனை 37.2 லட்சம் டன்! அதற்கு முந்தைய ஆண்டில் கோழிக் கறி விற்பனை 34.5 லட்சம் டன்! அதாவது ஆண்டுதோறும் சுமார் 3 லட்சம் டன் கோழிக் கறி விற்பனை கூடுகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு, கோழிக் கறிக் கடைகள், சில்லி சிக்கன் தள்ளுவண்டிக் கடைகள் மிகமிகக் குறைவு. ஆனால், இப்போது ஒவ்வொரு தெருமுனையிலும் சில்லி சிக்கன் கிடைக்கும் என்ற நிலை உருவாகியுள்ளது. அமெரிக்கா தனது கோழிக் கறியைக் கொண்டு வந்து இந்தியாவில் திணித்தால், இந்தியாவின் உள்ளூர் கோழிக் கறி வர்த்தகம் 40% பாதிக்கப்படும் என்று கணிக்கிறார்கள். இந்தியாவில் தற்போது சராசரியாக ஆண்டுக்கு ரூ.50,000 கோடி கோழிக் கறி வர்த்தகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் அதிக அளவு கோழிக் கறி உற்பத்தி செய்யும் மாநிலங்கள் ஆந்திரமும், தெலங்கானாவும்தான். இங்கே விவசாயத்தின் ஒரு பகுதியாக கோழிப் பண்ணையும் பராமரிக்கப்படுகிறது. அமெரிக்கர்களைப் பொருத்தவரை கோழிக் கால் என்பது தேவையற்ற மாமிசப் பகுதி. அவர்கள் விரும்பிச் சாப்பிடுவது மார்புக் கறி (பிரெஸ்ட் பீஸ்) மட்டுமே. ஆனால், இந்தியாவில் "லெக் பீஸ்' என்கிற கோழிக் கால் விலை அதிகம். அமெரிக்காவில் அது வெறும் மாமிசக் கழிவு. ஆகவே, இந்தியாவில் என்னதான் வரி விதிப்பு

இருந்தாலும், "லெக் பீஸ்' அனைத்தையும் இந்தியாவில் கொண்டு வந்து தள்ளுவதென்பது அமெரிக்காவைப் பொருத்தவரை, குப்பையில் கொட்டுவதை இந்தியாவில் கொட்டிக் காசாக்குவோம் என்பதுதான். இந்தியாவில் கோழிக் கால் மட்டுமே கிலோ ரூ.150-க்கு விற்பனை செய்யப்பட்டால், அதே கோழிக் கால் கறியை கிலோ ரூ.50 அளவுக்கு இந்தியாவில் விற்பனை செய்ய அமெரிக்காவால் முடியும். கறிக் கோழி உற்பத்தியாளர்கள் வெளியில் சொல்ல முடியாமல் உள்ளேயே நினைத்து மருகும் விவகாரம்- அமெரிக்கக் கோழிக் காலுடன் இந்தியக் கோழிக் கால் போட்டி போட முடியாது என்பதுதான். அதற்கு வெறும் விலை மட்டுமே காரணம் அல்ல. அமெரிக்காவில் கோழி வளர்ப்பு, உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கண்காணிப்பில் இருக்கிறது. இந்தியாவில், அப்படியல்ல. கறிக் கோழி சீக்கிரமே எடை கூட வேண்டும் என்பதற்காக ஹார்மோன்களை ஊசி மூலமும், தீவனத்தில் கலந்தும் கொடுப்பது இங்கே பரவலான நடைமுறை. இதனால், உயர் நடுத்தர மற்றும் மேல்தட்டு மக்கள் அனைவரும் அமெரிக்க "லெக் பீஸ்' சாப்பிடவே விரும்புவார்கள். அதற்கு அவர்கள் விலை அதிகம் கொடுக்கவும் தயங்கமாட்டார்கள். இப்போதே சங்கிலித் தொடர் சில்லறை விற்பனைக் கூடங்கள் அனைத்தும் அமெரிக்காவின் லெக் பீஸ்ŷக்கு தயாராகிவிட்டன. இந்திய கறிக் கோழி விற்பனையாளர்கள் தங்கள் சந்தையை நடுத்தர மற்றும் ஏழைகளின் பக்கம் திருப்பியாக வேண்டும். இங்கே அதிக விலை, அதிக லாபம் சாத்தியமில்லை. இந்தியாவுக்கு முழுக் கோழியை மட்டுமே ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று அமெரிக்காவுக்கு நிபந்தனை போடலாம். வெட்டப்பட்ட கோழிக் கறி என்றால் (அதாவது லெக் பீஸ்) அதற்கு இரட்டிப்பு வரி போடுங்கள், திணிப்புக்கு எதிரான (ஆன்ட்டி டம்பிங்) வரி விதிப்பு முறைகளைக் கையாளுங்கள் என்று அரசுக்கு இந்திய கோழிக் கறி உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைக்கிறார்கள். உலக வர்த்தக விதிப்படி, ஆறு மாதங்களுக்கு

மேலாக குளிர்பதன அறையில் இருந்த மாமிசங்களை இந்தியாவில் திணிக்கக் கூடாது என்று இந்தியா தடை விதிக்க முடியும். ஆனால், இவை ஆறு மாதங்களாகக் குளிர்பதன அறையில் இருந்தவை என்பதை நிரூபிப்பது மிகவும் அரிது. இந்தக் கோரிக்கைகளில் எது சாத்தியமாகும், அமெரிக்கா தனது வர்த்தக உத்தியை எவ்வாறு தகவமைக்கும் என்பது இன்னும் வெளிப்படையாகத் தெரியவில்லை.

உலக வர்த்தக அமைப்பில் அங்கம் வகிப்பதாலும், இந்தியா- அமெரிக்கா இடையே பரஸ்பர வணிக ஒப்பந்தங்கள் இருப்பதாலும், மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் முடிவுக்கு இந்தியா கட்டுப்பட்டே நடக்க வேண்டும். அதேவேளையில், இந்திய கோழிக் கறி உற்பத்தியாளர்களின் நலனையும், விவசாயிகள் நலனையும் பாதுகாக்கவும் வேண்டும். என்ன செய்யப் போகிறோம் நாம்?

**சென்னையில் காய்கறி விலை அதிகரிப்பு**



திருமண நிகழ்ச்சிகள், வரத்து குறைவு உள்ளிட்ட காரணங்களால் சென்னையில் காய்கறி விலை கடந்த வாரத்தைக் காட்டிலும் தற்போது அதிகரித்துள்ளது.

சென்னை கோயம்பேடு சந்தைக்கு தமிழகம் உள்ளிட்ட பிற மாநிலங்களிலிருந்து லாரி உள்ளிட்ட வாகனங்கள் மூலம் காய்கறிகள் தினமும் கொண்டுவரப்பட்டு சென்னையைச் சுற்றியுள்ள 64 சில்லறை விற்பனைச் சந்தைகளுக்கு அனுப்பப்படுகிறது. கடந்த மார்ச் மாதத்தில் கணிசமாக குறைந்திருந்த காய்கறிகளின் விலை கோடை காலம் தொடங்கியதையடுத்து படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. இந்த நிலையில், கோயம்பேடு சந்தையில் பெரிய வெங்காயம், தக்காளி, பீன்ஸ் உள்பட பெரும்பாலான காய்கறிகளின் விலை கடந்த வாரத்தைக் காட்டிலும் கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.15 வரை அதிகரித்துள்ளது. இது குறித்து கோயம்பேடு சந்தை காய்கறி வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறியது: வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் காய்கறிகள் சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் உற்பத்தி குறைந்துள்ளது. கடந்த வாரம் 300 லாரிகளில் சுமார் 4,500 டன் காய்கறிகள் தினமும் விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டன. விளைச்சல் குறைந்ததால் தற்போது 250-க்கும் குறைவான லாரிகளில் மட்டுமே காய்கறிகள் ஏற்றி வரப்படுகின்றன. மேலும் திருமணம், கோயில் திருவிழாக்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளின் காரணமாக காய்கறிகளுக்கான தேவை அதிகமாக உள்ளது. எனவே, அவற்றின் விலை தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார்.

கோயம்பேடு சந்தையில் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி காய்கறி விலை நிலவரம் (கிலோவுக்கு):

| காய்கறிகள் | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| பெரிய வெங்காயம் | ரூ.32 | ரூ.40 |
| சின்ன வெங்காயம் | ரூ.25 | ரூ.40 |
| தக்காளி | ரூ.30 | ரூ.45 |

| | | |
|---|---|---|
| கத்தரிக்காய் | ரூ.25 | ரூ.36 |
| பீன்ஸ் | ரூ.50 | ரூ.65 |
| கேரட் | ரூ.36 | ரூ.45 |
| உருளைக்கிழங்கு | ரூ.18 | ரூ.30 |
| பச்சைப்பட்டாணி | ரூ.170 | ரூ.185 |
| காலிஃபிளவர் | ரூ.20 | ரூ.35 |
| பாகற்காய் | ரூ.25 | ரூ.40 |
| முருங்கைக்காய் | ரூ.45 | ரூ.65 |
| முட்டைக்கோஸ் | ரூ.15 | ரூ.22 |
| அவரை | ரூ.35 | ரூ.44 |
| பச்சை மிளகாய் | ரூ.22 | ரூ.30 |
| எலுமிச்சை (ஒன்று) | ரூ.3 | ரூ.5 |

**கொடைக்கானலில் விளைவிக்கப்படும் வண்ண முட்டைக்கோஸ்**

கொடைக்கானலில் விளையும் வண்ண முட்டைக்கோப்ஸ சுற்றுலாப் பயணிகள் ஆர்வமுடன் வாங்கிச்செல்கின்றனர்.

கொடைக்கானலில் உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட்ரூட், முட்டைக்கோஸ் உள்ளிட்ட காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. இந்நிலையில் குண்டுப்பட்டி, பூம்பாறை, பள்ளங்கி உள்ளிட்ட பகுதிகளில் தற்போது வண்ண முட்டைக்கோஸ் விளைவிக்கப்படுகிறது.

முட்டைக்கோஸ் பொதுவாக வெளிர் பச்சை நிறத்தில் இருக்கும். ஆனால் தற்போது விளைவிக்கப்படும் முட்டைக்கோஸ் அடர் வண்ணத்தில் வித்தியாசமாக உள்ளது.

இந்த வகை முட்டைக்கோஸின் விதைகளை பெங்களூரில் இருந்து வாங்கி வந்து விளைவிக்கின்றனர்.மேலும் இவை அதிக எடையுடனும், மிகுந்த சுவையுடனும் இருப்பதால் வண்ண முட்டைக்கோ்ஸ பார்க்கும் சுற்றுலாப்பயணிகள் அவற்றை ஆர்வமுடன் வாங்கிச்செல்கின்றனர்.

தற்போது கொடைக்கானல் மார்க்கெட்டில் வண்ண முட்டைக்கோஸ்க்கு நல்ல வரவேற்பு உள்ளது. மார்க்கெட்டில் கிலோ ரூ.30 முதல் ரூ.35வரை விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரி செந்தில்குமார் கூறியது:

வண்ண முட்டைக்கோஸ் பெங்களூரில் அதிகம் விளைவிக்கப்படுகிறது. நல்ல வரவேற்பு உள்ளதால் கொடைக்கானலிலும் விளைவிக்கப்படுகிறது.

வண்ண முட்டைக்கோ்ஸ சேமியா பாயசத்துடன் கலக்கும்போது சுவை மிகுந்து காணப்படுவதால் விசேஷ நிகழ்ச்சிகளுக்கு அதிகம் வாங்கப்படுகிறது என்றார்.

**விருதுநகர் மார்க்கெட்டில் மல்லி விலை ரூ.200 அதிகரிப்பு**

உற்பத்தி குறைவு போன்ற காரணங்களால் மல்லி குவிண்டாலுக்கு ரூ.200 வரையில் அதிகரித்தும், அதைத் தொடர்ந்து பாமாயில் எண்ணைய் விலையும் டின்னுக்கு ரூ.25 வரையில் விருதுநகர் மார்க்கெட்டில் உயர்ந்துள்ளது.

மல்லி உற்பத்தி குறைந்ததால் மார்க்கெட்டிற்கு வரத்துக் குறைந்துள்ளது. இதனால் விருதுநகர் மார்க்கெட்டில் ஒரு குவிண்டாலுக்கு ரூ.200 வரை விலை அதிகரித்துள்ளது. இதைத் தொடர்ந்து சமையலுக்கும் பயன்படுத்தப்படும் பாமாயில் எண்ணெய் உள்நாட்டில் உற்பத்தி இல்லாத நிலையில், மலேசியா, இந்தோனேசியா ஆகிய பகுதிகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால் விருதுநகர் மார்க்கெட்டில் 15 கிலோ கொண்ட பாமாயில் டின்னுக்கு ரூ.25 வரையில் உயர்ந்துள்ளது. இதேபோல், கடலை உற்பத்தியும்

குறைந்த அளவில் உள்ள நிலையில், தரமான கடலையை பிரித்து அதிக விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால் உள்ளூர் மார்க்கெட்டில் கடலை வரத்து குறைந்துள்ளது. எனவே 15 கிலோ கொண்ட டின்னுக்கு ரூ.20 வரையில் உயர்ந்திருக்கிறது. மேலும், பாசிப்பருப்பு வகைகள், உருட்டு உளுந்தம் பருப்பு வகைகள், பட்டாணி பருப்பு வகைகள் ஆகியவைகளின் விலை கடந்த வாரம் போலவே விலை இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**இயற்கை முறையில் காய்கறி சாகுபடி குறித்து விளக்கம்**

இயற்கை முறையில் காய்கறி சாகுபடி செய்து, அதிக உற்பத்தியை பெறுவது குறித்து பல்லடம் தோட்டக்கலை துறையினர் விளக்கம் அளித்துள்ளனர்.

இது குறித்து பல்லடம் தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் சுகந்தி கூறியது:

விவசாய நிலங்களில், இயற்கையாகக் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு காய்கறிப் பயிர்களை தாக்கும் பூச்சிகளை விரட்ட முடியும். இதனால், விவசாயிகளுக்கு செலவு குறைவதுடன், இயற்கையான, தரமான காய்கறிகளையும் மக்களுக்கு விற்பனை செய்யலாம்.

காய்கறி சாகுபடிகளில், பூச்சிகளை இனப்பெருக்கம் செய்ய விடாமல், விரட்டினாலே பூச்சிகளின் எண்ணிக்கை குறைந்து காய்கறி உற்பத்தி குறைவது கட்டுப்படுத்தப்படும். கால்நடைகள் உண்ணாத கசப்புச் சுவை கொண்ட, துர்நாற்றம் வீசும் மூலிகைகளை சேகரித்து பூச்சிகளை விரட்ட பயன்படுத்தலாம். நொச்சி இலை, சங்குப்பூ இலை, எருக்கம்பூ இலை, சோற்றுக்கற்றாழை, வேப்பம் இலை, ஆடுதொடா இலை, கருவேலம், புங்க மர இலை, விதைகள், காட்டாமணக்கு, ஊமத்தை இலைகள், காய்கள் உள்பட 10 தாவர இலைகளை தலா அரை கிலோ வீதம் எடுத்து, 20 லிட்டர் கோமியம், இரண்டு கிலோ பசுஞ்சாணம் ஆகியவற்றை

கலந்து, பிளாஸ்டிக் கொள்கலனில் அடைக்க வேண்டும். நாள் ஒன்றுக்கு இரு முறை கலக்க வேண்டும். 15 நாள்களுக்குள் நொதித்தல் முறையில் பூச்சி விரட்டி தயாராகி விடும். இவற்றை வடிகட்டி, தெளிவான கரைசலை பூச்சி விரட்டியாக பயன்படுத்தலாம்.

இதனால் உடல் நலனுக்கு பாதிப்பில்லாத தரமான காய்கறிகளை உற்பத்தி செய்ய முடியும் என்றார்.

**ஜூன் 19-இல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உதகையில் ஜூன் 19-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதுதொடர்பாக, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், உதகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜூன் 19-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறுகிறது. எனவே, நீலகிரி மாவட்ட விவசாயிகள், விவசாயம் தொடர்பான குறைகள் இருப்பின் தோட்டக்கலை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, உதகை-1 என்ற அலுவலக முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**நீலகிரி விவசாயிகள் மீண்டும் இயற்கை விவசாயத்திற்கு மாற வேண்டும்**

நீலகிரி விவசாயிகள் மீண்டும் இயற்கை விவசாயத்திற்கு மாற வேண்டுமென, உதகையில் நடைபெற்ற சுற்றுச்சூழல் தின கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

நீலகிரி சுற்றுச்சூழல், கலாசார சேவை அறக்கட்டளை, சிஎஸ்ஐ சிஎம்எம் பள்ளியின் தேசிய பசுமைப்படை மாணவர்கள் சார்பில், உலக சுற்றுச்சூழல் தின விழா, கருத்தரங்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கருத்தரங்கில், பாரம்பரிய தானியங்கள், உடல் ஆரோக்கியம்,

பல்லுயிர் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து விவாதங்கள் நடைபெற்றன. இதில், பங்கேற்ற நெஸ்ட் அறக்கட்டளையின் நிர்வாகி சிவதாஸ் பேசியதாவது: நீலகிரி மாவட்டம் வன வளத்திற்கும், மண் வளத்திற்கும் குறைவில்லாத மாவட்டமாகும். இங்கு நிலவும் தட்பவெப்பநிலை விவசாயத்திற்கு ஏற்றது. இந்நிலங்களில் விளையும் விளைபொருள்கள் அனைத்தும் உலகத்தரம் வாய்ந்தவை.

நீலகிரியில் தற்போது ஓரின முறையிலேயே சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால், பாரம்பரிய பயிரினங்கள் அழியும் அபாயமுள்ளது. நீலகிரியில் பல்லுயிர் தன்மையும் கேள்விக்குறி ஆகியுள்ளது. அதிகரித்துவரும் ரத்த சோகை, நீரிழிவு, உடல் பருமன் போன்ற நோய்களை கட்டுப்படுத்த பாரம்பரிய உணவு முறை அவசியமாகும்.

மேலும், பறவை இனங்களின் வளர்ச்சிக்கும், அயல் மகரந்தச் சேர்க்கை நடைபெறவும் முக்கியத்துவம் வாய்ந்த பூச்சி இனங்களையும் பாதுகாக்க வேண்டும். அப்போதுதான் பல்லுயிர் தன்மை வளம் பெறும்.

எனவே, நீலகிரி மாவட்டத்தில் பழங்காலத்தில் இருந்ததைப்போல, மீண்டும் இயற்கை விவசாயத்திற்கே விவசாயிகள் முன்னுரிமை அளிக்க வேண்டும். அப்போதுதான் பொருளாதாரமும் வளர்ச்சியடையும் என்றார்.

**விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள நூடுல்ஸ்களை திருப்பி அனுப்ப 3 நாள் கெடு**

உதகையில் உள்ள கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள நூடுல்ஸ்களை திருப்பி அனுப்ப 3 நாள் கெடு விதிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நூடுல்ஸ் விற்பனை தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில், மேகி நூடுல்ஸ் வகைகளில் 6 ரகங்களும், ரிலையன்ஸ், ஸ்மித் அண்டு ஜோன்ஸ், சீன நிறுவனத்தின் நூடுல்ஸ்களும் தடை செய்யப்பட்டுள்ளன. இதைத்தொடர்ந்து, நீலகிரி மாவட்ட

உணவுப் பாதுகாப்பு அதிகாரி டாக்டர் ரவி, அலுவலர் சிவகுமார் ஆகியோர் கொண்ட சிறப்புக் குழுவினர், சனிக்கிழமை உதகை நகராட்சியில் ஆய்வு மேற்கொண்டனர். உதகை மார்க்கெட், சேரிங்கிராஸ், கமர்ஷியல் சாலை, குன்னூர் சாலை உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், பல்பொருள் அங்காடிகள், கடைகள், மொத்த விற்பனையாளர் கிடங்குகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த நூடுல்ஸ்களை உற்பத்தியாளருக்கு உடனடியாக திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு அறிவுறுத்தினர்.

அதேபோல, இருப்பு வைத்துள்ள நூடுல்ஸ் பாக்கெட்டுகள் அனைத்தையும் செவ்வாய்க்கிழமைக்குள் சம்பந்தப்பட்ட முகவருக்கு திருப்பி அனுப்ப வேண்டும். இல்லையெனில், அதுகுறித்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**"கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.9.7 கோடியில் மாதிரிப் பண்ணை'**

கிருஷ்ணகிரி மாவட்டம், தளியில் நவீன தொழில்நுட்பம் மூலம் விவசாயிகள் உற்பத்தி செய்து ஏற்றுமதி மேற்கொள்வது குறித்து பயிற்சி உள்ளிட்டவை அளிக்கும் மாதிரிப் பண்ணை ரூ.9.7 கோடியில் அமைக்கப்பட்டு வருகிறது. இன்னும் 2 மாதங்களில் இது பயன்பாட்டுக்கு வரும் என்றார் மாநிலத் தோட்டக்கலைத் துறை இயக்குநர் எல். சித்திரசேனன்.

திருச்சி மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் சனிக்கிழமை நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற பின்னர், அவர் அளித்த பேட்டி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலர் சாகுபடி அதிகளவில் நடைபெற்று வரும் நிலையில், நவீன தொழில்நுட்ப முறையில் உற்பத்தி செய்து வெளிநாட்டுக்கு மலர்களை

ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து பயிற்சி அளித்தல் போன்றவற்றை அளிக்கும் வகையில் இஸ்ரேல் தொழில்நுட்ப

உதவியுடன் தளி பகுதியில் ரூ. 9.7 கோடியில் மாதிரிப்பண்ணை அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பண்ணையில் ஏற்றுமதிக்கு உகந்த ரோஜா, லில்லியம் போன்ற மலர்கள், வெட்டு மலர்களை ஏற்றுமதி செய்வது, அதற்கான வாய்ப்புகள் குறித்து விவசாயிகளுக்குப்

பயிற்சியளிக்கப்பட உள்ளது. இந்த பண்ணை 2 மாதங்களுக்குள் செயல்படத் தொடங்கும். ஒவ்வொரு மலரும் அறுவடை செய்த பின்னர், சேதத்தைத் தவிர்க்கும் வெப்பநிலையில், இந்த பண்ணை வளாகத்தில் 7 உலர் கூடங்கள் அமைக்கப்படும். குறைந்தது 48 மணி நேரமாவது குறிப்பிட்ட சில மலர்கள் குறிப்பிட்ட வெப்பநிலையில் இருந்தால்தான் அவை ஏற்றுமதி செய்யமுடியும் என்பதால் இந்த கூடங்கள் பெரும் பயனுள்ளதாக இருக்கும். ஏற்றுமதி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு மலருக்கு ரூ.15 முதல் ரூ.20 வரை விலை கிடைக்கும். ஏறத்தாழ 3,600 விவசாயிகள் இதன் மூலம் பயன் பெறுவர். இந்த மாதிரிப்

பண்ணையிலேயே விவசாயிகளுக்கு பல்வேறு விதமான பயிற்சிகளும் அளிக்கப்பட உள்ளன. தளியைப் போன்று, திண்டுக்கலில் விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் வகையில் காய்கறிக்கான சிறப்பு மையம் ரூ. 9.7 கோடியில் தொடங்கப்பட்டுள்ளது. தக்காளி,

கத்தரிக்காய், மிளகாய், குடைமிளகாய் போன்றவை ஏற்றுமதி செய்வதற்கும், மதிப்புக் கூட்டித் தருவதற்கும் தேவையான தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது என்றார் சித்திரசேனன்.

**"விவசாயிகள் விளைபொருள்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்று அதிக லாபம் பெறலாம்'**

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் விளைபொருள்களை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் விற்று அதிக லாபம் பெறலாம் என்றார் புதுக்கோட்டை வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர்

முகம்மது அப்துல் நசீர். புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரதானப் பயிராக நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, பயறு வகைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. இதில் கூடுதல் மகசூல் பெற வேளாண்மைத் துறையின் மூலம் பல்வேறு தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு கற்றுத் தரப்படுகிறது. இதனை விவசாயிகள் முறையாக கடைப்பிடித்து கூடுதல் மகசூல் பெற்று வருகின்றனர். ஆனால், விளைவிக்கின்ற விளைபொருள்களுக்கு போதிய விலை கிடைக்காததாலும், உள்ளூரிலேயே விற்பனை செய்வதாலும் விவசாயிகளுக்கு குறைந்த அளவிலேயே லாபம் கிடைத்து வருகின்றது. இந்நிலையை போக்க புதுக்கோட்டை வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் கிராமங்களில் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அறந்தாங்கி ஒன்றியம், மறமடக்கி ஊராட்சி அலுவலக வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒழுங்குமுறை விற்பனைக்கூட பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வு கூட்டத்துக்கு ஊராட்சித் தலைவர் இரா. அன்பரசு தலைமை வகித்தார். இதில் புதுக்கோட்டை வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் பேசியது:

வேளாண் வணிகத்துறையின் மூலம் கிராமங்களில் உலர் களத்துடன் கூடிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்பட்டு விவசாயிகளின் பயன்பாட்டில் உள்ளது. ஒவ்வொரு சேமிப்பு கிடங்குக்கும் மின்னணு தராசு மற்றும் விளைபொருளின் ஈரப்பதத்தை அறிய ஈரப்பதமானி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் விளைபொருள்களை நன்கு காய வைத்து சரியான எடை மற்றும் தரம் பிரித்து விற்பனை செய்ய முடியும். மேலும், தற்போது சாகுபடி செய்துள்ள மக்காச்சோளத்தை இடைத்தரகர்கள் இன்றி விவசாயிகள் நேரடியாக விற்பனை செய்திட வேளாண் வணிகத் துறை ஏற்பாடு செய்துள்ளது. எனவே வரும் ஒரு மாத காலத்துக்குள் அறுவடையாகும்

மக்காச்சோளத்தை திருவரங்குளம் வேளாண் வணிக மைய ஆலோசனைக்குழு மூலம் விற்று கூடுதல் லாபம் அடையலாம் என்றார்.

புதுக்கோட்டை விற்பனைக்குழு மேலாளர் செந்தில்பாண்டியன் பேசுகையில், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு விவசாயிகள் அதிக அளவில் விளைபொருள்களைக் கொண்டு வர வேண்டும். ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சரியான எடை, மறைமுக ஏலம், உடனுக்குடன் பணம், பிற மாவட்டங்களின் விலை விபரம் அறிதல், விலை கட்டுபடியாகவில்லையெனில் இருப்பு வைத்து பொருளீட்டுக் கடன் பெறுதல் மற்றும் விவசாயிகள் காப்பீடு என பல்வேறு வசதிகள் உள்ளன என்றார். முன்னோடி விவசாயிகள் ராஜ்குமார், பாண்டியராஜன், சின்னத்தம்பி, விஸ்வலிங்கம், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வேளாண்மை வளர்ச்சி திட்டப் பணிகள் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில், வேப்பந்தட்டை வட்டாரத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் அன்னமங்கலம் கிராமத்தில் ரூ. 1.25 லட்சம் மான்யத்துடன் ரூ. 1.68 லட்சம் மதிப்பிலான சொட்டு நீர்ப் பாசன கருவிகள் அமைக்கப்பட்டு மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டிருப்பதைப் பார்வையிட்டார். பின்னர், நடப்பாண்டில் ரூ. 1.84 லட்சம் மான்யத்தில் ரூ. 3.97 லட்சம் மதிப்பீட்டில் காய்கறி மற்றும் பழவகைகளை உலர்த்த பயன்படும் சூரிய கூடார உலர்த்தியின் பயன்பாடு குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து, ஆலத்தூர் வட்டாரம் டி. களத்தூரில் நடைபெற்று வரும் மண் பரிசோதனை முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் கூறியது: நடமாடும் மண் பரிசோதனை நிலையத்தின் மூலம் மண்ணில் உள்ள களர் மற்றும் அமிலத்தன்மை, உப்பின் தன்மை, பாஸ்பரஸ்,பொட்டாஷ்,தாமிரம்,இரும்பு, துத்தநாகம்

ஆகிய சத்துகள் குறித்து விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு,மண் பரிசோதனை செய்யாமல் உரமிட்டால் தேவையற்ற சத்து மண்ணிற்கு அதிகமாகக் கிடைப்பதுடன், உற்பத்தி இழப்பும் ஏற்படுகிறது. மேலும், மண் பரிசோதனை செய்து வேளாண்மை அலுவலர்களின் ஆலோசனைப்படி பயிர் செய்வதன் மூலம் உர செலவை கட்டுப்படுத்தி அதிக லாபம் பெறலாம் என்றார் மதுசூதன் ரெட்டி. இந்த ஆய்வின் போது, வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) அய்யாசாமி, வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் இந்திரா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**இயற்கை வேளாண் விவசாயிகளுக்கான முகாம்**

பெரம்பலூர் புறநகர்ப் பேருந்து நிலையம் அருகேயுள்ள தலையாட்டி சித்தர் கோயில் வளாகத்தில், இயற்கை முறை வேளாண் விவசாயிகளுக்கான முகாம் சனிக்கிழமை நடைபெற்றது. முகாமுக்கு, தமிழ்நாடு அமைப்பின் நிறுவனர் ரமேசு கருப்பையா தலைமை வகித்தார்.

இதில், கருங்குறுவை, அறுபதாம் குறுவை ஆகிய மரபு வழி விதை நெல்கள், காய்கறிகள், பழங்கள் ஆகியவைகளை குறைந்த செலவில் பயிரிட்டு அதிக லாபம் பெறுவது குறித்தும் விவசாயிகள் கலந்துரையாடினர். தொடர்ந்து, அசோலா வளர்ப்பு முறை போன்ற இயற்கை இடு பொருள்கள் குறித்து செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. விவசாயிகள் தங்களது இயற்கை முறை விவசாய அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். மேலும், பாரம்பரிய விதைகள் கண்காட்சி, இயற்கை முறையில் சாகுபடி செய்யப்பட்ட பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்ச்சியில் எளம்பலூர், மேலப்புலியூர், ஆலத்தூர், சிறுவாச்சூர், தேனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**தஞ்சாவூர் மாவட்டத்தில் 12 லட்சம் மரக்கன்றுகள்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈஷா பசுமைக் கரங்கள் திட்டத்தின் கீழ் 12 லட்சம் மரக்கன்றுகள் நடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் பாரத் கல்லூரி வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற உலகச் சுற்றுச்சூழல் நாள் விழா, பாரத் மரக்கன்றுகள் மையத் திறப்பு விழாவில் மரக்கன்றை பாரத் கல்விக் குழுமச் செயலர் புனிதா கணேசன் நட்டு, திட்டத்தைத் தொடக்கி வைத்தார். தஞ்சாவூர் வன விரிவாக்க மைய வனவர் தி. இளஞ்செழியன் சிறப்புரையாற்றினார். பின்னர், ஈஷா தன்னார்வ தொண்டர்கள் மணி உள்ளிட்டோர் தெரிவித்தது:

ஈஷா பசுமைக் கரங்கள் திட்டத்தின் கீழ் தமிழகத்திலும், புதுச்சேரியிலும் 50 லட்சம் மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காகப் பசுமைக் கரங்கள் வல்லுநர்கள் விவசாயிகளின் நிலத்துக்கு நேரடியாகச் சென்று மரம் வளர்க்கும் முறை, ஆலோசனைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பள்ளி மாணவர்களுக்கும்

விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 12 லட்சம் மரக்கன்றுகள் நடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் முதல் மரக்கன்று பாரத் கல்லூரி வளாகத்தில் நட்டு தொடக்கி வைக்கப்பட்டது.

**இலை, விதை கண்டறியும் போட்டி: நெல்லை மாணவர்கள் சிறப்பிடம்**

மாவட்ட அளவிலான இலை, விதை கண்டறியும் போட்டியில் திருநெல்வேலி மாணவர்கள் சிறப்பிடம் பெற்றனர்.

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி மாவட்ட அறிவியல் மையத்தில் பல்வேறு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மாவட்ட அளவிலான இலை, விதை கண்டறியும் போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. போட்டியை மாவட்ட அறிவியல் அலுவலர் கே.நவராம்குமார்

தொடங்கிவைத்தார். காட்சிப்படுத்தப்பட்டிருந்த இலை, விதைகளின் பெயர்களை மாணவர்கள் எழுதினர். விதை கண்டறியும் போட்டியில் பெருமாள்புரம் ஸ்ரீலலிதா வித்யாஷ்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி எம்.ஜீவிதா முதலிடமும், வி.தாஹிரா செரீன் இரண்டாமிடமும் பிடித்தனர். மகாராஜநகர் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் வெள்ளிவிழா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர் கே.கார்த்திக்ராஜ் சிறப்புப் பரிசு பெற்றார். இலை கண்டறியும் போட்டியில் மகாராஜநகர் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் வெள்ளிவிழா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி ஜி.கீர்த்தி ஐஸ்வர்யா முதலிடமும், ஸ்ரீ லலிதா வித்யாஷ்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி வி.பூர்ணகுமாரி இரண்டாமிடமும் பிடித்தனர். இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவி எஸ்.ஹரிணி சிறப்புப் பரிசு பெற்றார். மாவட்ட அறிவியல் மைய கல்வி உதவியாளர்கள் மாரிலெனின், பொன்னரசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஆரோக்கியத்தை கெடுக்கும் உணவுப்பொருட்களும், ரசாயன பொருட்களும்**



ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கும் வகையில்அதிக அளவு வேதிப் பொருட்கள் கலந்திருப்பதால் "மேகி நூடுல்ஸ்' ன் விற்பனை நாட்டின் பல் வேறு பகுதிகளில் தடை செய்யப்பட்ட நிலையில் மேலும் பல பிரபல நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கும் விற்பனைக்கும் தடை வரும் நிலை உருவகி உள்ளது.

"ருசியானது, ஆரோக்கியமானது' என்று மேகி தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டாலும், பதப்படுத்தப்பட்டு பேக்கிங் செய்யப்பட்ட ரெடிமேட் நூடுல்ஸ் உணவு வகைகள் என்றுமே உடல் நலத்திற்கு நல்லதல்ல.கடந்த வாரம் "மேகி நூடுல்ஸ்' நாடு முழுவதும் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டதில் அளவுக்கு அதிகமான காரீயம் மற்றும் மோனோ சோடியம் குளுக்கோனேட் போன்ற வேதிப் பொருட்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. இவை தலைவலி, இதய படபடப்பு, நெஞ்சு வலி, குமட்டல், நரம்பு மண்டல பாதிப்பு, பசியின்மை

போன்ற பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை என்பதால். நாடு முழுவதும் உள்ள கடைகளில் மேகி நூடுல்ஸ் விற்பனை தடை செய்யப்பட்டது.

ஆனால், காரீயம் மற்றும் எம்.எஸ்.ஜி மட்டும் மேகியில் பிரச்சனையாக இல்லை என்பது இப்போது தெரிய வருகிறது. 2012ல் டில்லியில் உள்ள அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் ஆராய்ச்சி மையம் தந்துள்ள தகவலின் படி "மேகி நூடுல்ஸ்' போன்ற உணவு வகைகளில் அதிக அளவு உப்பும், குறைந்த அளவு நார்ச்சத்தும், கார்போஹைரேட்டும் இருப்பதால் உடல் பருமன் ஆவதோடு நீரிழிவு நோய்க்கும் வழிவகுக்கும் என்று சொல்கிறது. மேகி நூடுல்ஸ் மட்டுமில்லாமல் பல வகையான உணவுப் பொருட்களின் தரமும் ஆராயப்பட வேண்டியவையாக இருக்கின்றன. பெரும்பாலான மக்கள் லேபல்களை ஆராய்ந்து அவற்றில் என்ன பொருட்கள் கலக்கப்பட்டுள்ளன என்பதை கவனிப்பது இல்லை. மொறு மொறு பிஸ்கட்டுகளையும் சிப்ஸ்களையும் வாங்கும் மக்கள், அதற்குள் ஒளிந்திருக்கும் ஆபத்து மிகுந்த வேதிப் பொருட்களைப் பற்றியும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். மேகி போன்று மற்ற "பாஸ்ட் புட்' வகைகளில் சோடியம் அளவு அதிகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது ரத்த அழுத்தத்தை அதிகரிக்கக் கூடியது. "பாஸ்ட் புட்' தயாரிப்புகள் பல வேதி செயல்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு தானியங்கள் பாலிஷ் செய்யப்படுவதால், அவை இயற்கை தன்மையை இழந்து ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கின்றன. கேக்குகள், பிஸ்கட்டுகள், தானியங்கள் மற்றும் பல ஸ்நாக்ஸ்கள் இந்த வகையில் அடங்கும். தீங்கு விளைவிக்கும் வேதிப் பொருட்கள்:

பி.எச்.ஏ (புடிலேடட் ஹைட்ராக்ஸிஅனிசோல்): இது உணவுப் பொருள் கெட்டுப் போகாமல் நீடித்து வருவதற்காக கலக்கப்படும் வேதிப் பொருள். இது கல்லீரல் மற்றும் சிறுநீரகத்தை பாதிக்கக் கூடியது. உருளைக் கிழங்கு சிப்ஸ், சூயிங் கம், பாஸ்ட் புட் செரியல்ஸ் வகைகளில் கலக்கப்படுகிறது.

சோடியம் நைட்ரேட் : உணவுக்கு நிறம் ஊட்டவும், சீக்கிரம் கெட்டுப் போகாமல் இருக்கவும் சேர்க்கப்படுகிறது. பெரும்பாலும் மாமிசம் பதப்படுத்தப் பயன்படுகிறது. வயிற்று வலி, மூளை மற்றும் சிறுநீரக புற்று நோய், தலை வலி, வாந்தி போன்ற பக்க விளைவுகள் ஏற்படும். எனவே, பதப்படுத்தப்பட்ட மாமிசங்கள் வாங்குவதை தவிர்க்க வேண்டும்.

செயற்கை வண்ணம் மற்றும் வாசனைப் பொருட்கள்: சிப்ஸ், குக்கிஸ் போன்ற பேக்கிங் <உணவு வகைகளின் தயாரிப்பில் பயன்படுகிறது. ஒவ்வாமை, கிறுகிறுப்பு போன்ற விளைவுகள் ஏற்படும். பிரிலியண்ட் ப்ளு, டார்ட்ரஜைன், சன்செட் மஞ்சள் போன்ற செயற்கை நிறங்கள் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும்.

கலப்பான்கள்: இவை ஐஸ்கிரீம்கள், பிஸ்கட்கள், ரொட்டி தயாரிப்புகளில் அதிகம் பயன்படுகின்றன. அதிகம் உட்கொள்ளும் போது குடலில் ஒவ்வாமை ஏற்படுகிறது.

மோனோ சோடியம் குளுடமேட்: குளுடாமிக் அமினோ அமிலத்தின் சோடியம் உப்பான இது நூடுல்ஸ், சிப்ஸ், ஸ்நாக்ஸ் உணவுத் தயாரிப்பில் சுவையை அதிகரிப்பதற்காக சேர்க்கப்படுகிறது. இதனால் தலைவலி, இதய படபடப்பு, நெஞ்சு வலி, மூளை மற்றும் ஜீரண மண்டல பாதிப்பு ஏற்படுகிறது.

## திண்டுக்கல்லுக்கு வந்தது அமெரிக்க 'கிரீனி' ஆப்பிள்




திண்டுக்கல்:திண்டுக்கல்லில் பச்சை நிறஅமெரிக்க 'கிரீனி,' அடர் சிவப்புநிற நியுசிலாந்து 'ராயல்கேலா' போன்ற வெளிநாட்டு ஆப்பிள்கள் விற்பனைக்கு வந்துள்ளன.இந்தியாவில் காஷ்மீர், இமாச்சலபிரதேசம் ஆகிய பகுதிகளில் ஆப்பிள்அதிகளவில் சாகுபடியாகிறது. இந்தியாவில் விளையும் ஆப்பிள்கள் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து டிசம்பர் வரை விற்பனைக்கு வரும். அதன்பின் குளிர்பதன கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்ட ஆப்பிள்களே விற்பனைக்கு வரும்.தற்போது இந்திய ஆப்பிள்களுக்கான சீசன் முடிந்த நிலையில்அமெரிக்கா, சீனா, நியுசிலாந்து, ஆஸ்திரேலியா நாடுகளில் இருந்து ஆப்பிள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. திண்டுக்கல்லில் பச்சை நிற அமெரிக்கா 'கிரீனி,' அடர்சிவப்பு நிற நியூஸ்லாந்து 'ராயல்கேலா' ஆப்பிள்கள் விற்பனைக்கு வந்துள்ளன. 'கிரீனி' ஆப்பிள் கிலோ ரூ.160 க்கும், 'ராயல்கேலா' ஆப்பிள் ரூ.180 க்கும் விற்பனையாகின்றன.வியாபாரி ஜாபர்ஜாவீத் கூறியதாவது: 'கிரீனி' ஆப்பிளில் புளிப்பு, இனிப்பு கலந்து சுவையாக இருக்கும். நியுசிலாந்து ஆப்பிள் இனிப்பாக இருக்கும். வெளிநாட்டு ஆப்பிள்களில் சேதம் இருக்காது. இதனால் அவற்றை மக்கள் விரும்பி வாங்குகின்றனர் என்றார்.

## ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில்காலிபிளவர் விலை உயர்வு

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்டில் வரத்து குறைவால் காலிபிளவர் ஒன்றின் விலை ரூ.17ஆக அதிகரித்துள்ளது.ஒட்டன்சத்திரம் மலைப் பகுதியில் அமைந்துள்ள வடகாடு, கண்ணனூார், கோமாளிபட்டியை சுற்றி உள்ள பகுதிகளில் காலிபிளவர் பயிரிடப்படுகிறது. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படும் காலிபிளவரை கேரள வியாபாரிகளும், பிற மாவட்டங்களை சேர்ந்தவர்களும் அதிகளவு வாங்கிச் செல்கின்றனர்.

கோடை மழையால், காலிபிளவர் செடிகள் அழுகியும், நோய் தாக்குதலும் ஏற்பட்டு விளைச்சல் பாதிக்கப்பட்டது. கடந்த சில நாட்களுக்கு முன்பு காலி பிளவர் ஒன்றின் விலை ரூ.11 ஆக இருந்தது. நேற்று பூ ஒன்றின் விலை ரூ.17க்கு விற்கிறது. பல மாதங்களாக காலிபிளவர் ஒன்றின் விலை ரூ.10 க்கு குறைவாகவே விற்றது. வரத்து குறைந்து வருவதால் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## சுருங்குது வடகரை கண்மாய்: விரியுது வெள்ளரி விவசாயம்




சோழவந்தான்:சோழவந்தான் வடகரைகண்மாய் ஆக்கிரமிக்கப்பட்டு

வெள்ளரி, பாகற்காய் விவசாயம் கனஜோராக நடக்கிறது. கண்மாயில் தண்ணீரை வெளியேற்றுவதால் நெல் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.மொத்தம் 989 ஏக்கர் கொண்ட இக்கண்மாய் மூலம் 2,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாசனம் பெறுகின்றன. ஆண்டுதோறும் சித்திரை வரை தண்ணீர் நிரம்பி இருக்கும். இதனால் விவசாய கிணறுகளில் நீர் குறையாது;கடந்த சில ஆண்டுகளாக கண்மாயை ஆக்கிரமித்து வெள்ளரி, பாகற்காய் பயிரிடுகின்றனர். இதற்காக மாசி, பங்குனி முதல் வாரத்தில் கண்மாயில் தண்ணீரை வெளியேற்றி விடுகின்றனர். சில ஆண்டுகளாக வைகை வறண்டதால் நெல் விவசாயிகள் தவித்தனர். சமீபத்தில் கோடைமழை பெய்து கண்மாய்களில் தண்ணீர் உள்ளது. இத்தருணத்தில் கண்மாயை ஆக்கிரமித்து தண்ணீரை ெவளியேற்றுகின்றனர். மேலும் சிலர் கண்மாய்க்குள் குடிசைகள் அமைத்துள்ளனர்.முதல்போகம் நெல் சாகுபடிக்கு விவசாயிகள் கண்மாய் நீரை நம்பியே உள்ளனர். ஆனால் ஆக்கிரமிப்பு குறித்து பொதுப்பணித்துறையினர் கண்டுகொள்ளவே இல்லை. இப்பிரச்னையில் கலெக்டர் சுப்ரமணியம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மண்புழு உரம்**

பொள்ளாச்சி:பொள்ளாச்சி நகராட்சி ஆடுவதைக்கூடம் அருகே, திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு மண்புழு உரம் தயாரிப்பதற்கு ஏதுவாக, 8.80 லட்சம் ரூபாய் செலவில் தொட்டிகள் மற்றும் மேற்கூரைகள் அமைக்கும் பணி நடக்கிறது.பொள்ளாச்சி நகராட்சியில், தினசரி 60 டன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சேகரிக்கப்படும் குப்பைகள் நல்லூரில் உள்ள நகராட்சி குப்பைக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரிக்கப்பட்டு, மக்களிடமிருந்து

பெறப்படுகிறது. பின்னர், குப்பைக்கிடங்கில், குப்பைகள் இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. இந்நிலையில், நகராட்சி பகுதிகளிலுள்ள காய்கறி மார்க்கெட்டுகளில், சேகரமாகும் காய்கறிக்கழிவுகள், பழ குடோன்களிலிருந்து கிடைக்கும் பழங்களின் கழிவுகள், உணவு விடுதிகளில் சேகரமாகும் உணவுக்கழிவுகள் ஆகியவற்றிலிருந்து மண்புழு உரம் தயாரிக்கும் பணி, கடந்த 2013ம் ஆண்டு துவங்கப்பட்டது. இக்கழிவுகள் நகராட்சி 10வது வார்டு சுகாதாரப்பிரிவு கட்டடத்திற்கு கொண்டு வரப்பட்டு, உலர வைக்கப்பட்டன.பின்னர், மாட்டுச்சாணத்துடன் சேர்த்து அடுக்குகளாக பரப்பப்பட்டு; முதல் அடுக்கு மண் மற்றும் தாவர சாணம், தென்னை நார்க்கழிவுகள் அடுக்கப்பட்டன. காய்கறி, பழங்களின் கழிவுகள் துண்டுகளாக்கப்பட்டு முறையாக அளவு அடுக்குகளாக மாற்றப்பட்டது. தினமும் மாட்டுச்சாணம் மற்றும் நீர் தெளித்து ஈரப்பதம் பராமரிக்கப்பட்டது. தொடர்ந்து, 60 முதல் 120 நாட்கள் வரை பராமரிக்கப்பட்டு, மண்புழு உரமாக மாற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. 100 டன் தயாரிக்கும் வகையில், 25 மண் குவியல்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒரு கிலோ மண்புழு உரம் 25 ரூபாய்க்கு விற்பனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

உரம் தயாரிப்பு நிறுத்தம்

மண்புழு உரம் தயாரிப்பு பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளது. மண்புழு உரம் தயாரிப்பு செய்த இடத்தில், போதிய பாதுகாப்பு இல்லாத நிலையில், அந்த இடத்திலிருந்த பொருட்கள் திருட்டு போன சம்பவங்களும் நடந்தன. மண்புழு உரம் தயாரிக்கப்பட்ட இடம் மாற்று பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட உள்ளதால், வேறு இடத்திற்கு மாற்ற நகராட்சி திட்டமிட்டது. இதனால், மண்புழு உரம் தயாரிப்பு பணிகள் பாதியிலேயே கிடப்பில் போடப்பட்டன. இந்நிலையில், மீண்டும் மண்புழு உரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்துவது குறித்து நகராட்சி நிர்வாகத்தினர் திட்டமிட்டனர். அதன்படி, ஆடுவதை கூடம் அருகே மண்

புழு உரம் தயாரிப்பதற்கு ஏதுவாக 'வெர்மி கம்போஸ்ட் பிளான்ட்'க்குரிய தொட்டிகள் மற்றும் அவற்றுக்கு மேற்கூரைப்பணிகள் அமைக்க 8.80 லட்சம் ரூபாயில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன.

'விரைவில் விற்பனை'

நகராட்சி சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது:பொள்ளாச்சி நகரப்பகுதியில் மண்புழு உரம் தயாரிப்பதற்காக ஆடுவதை கூடம் அருகே மண்புழு உரம் தயாரிப்பதற்கான கூடம் அமைக்கப்பட்டு வருகிறது. தற்போது மண்புழு வளர்க்கும் பணி நடைபெறுகிறது. மண்புழு உரம் தயாரிப்பிற்காக 20 தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. நகரப்பகுதியிலிருந்து தினசரி 35 டன் மக்கும் குப்பைகள் வருகின்றன. அவற்றை தரம் பிரித்து மண்புழு உரம் தயாரிக்கப்பட உள்ளது.முதற்கட்டமாக 35வது வார்டு தேர்வு செய்யப்பட்டு, மக்கும், மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்க அங்கு ஒரு மையம் அமைக்கப்படும்.அந்த மையத்தில் பிரித்து வழங்கப்படும் மக்கும் குப்பை இங்கு கொண்டு வந்து உரம் தயாரிக்கப்படும். பொதுமக்களிடம் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.இதனைத்தொடர்ந்து மற்ற வார்டுகளிலும் இத்திட்டம் அமல்படுத்தப்படும். விரைவில் மண்புழு உரம் தயாரிக்கும் பணி துவங்கப்பட்டு, விற்பனை செய்யப்படும்.இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

**ஏற்காடு மலர் கண்காட்சி மகிழ்ச்சியுடன் நிறைவு**

ஏற்காடு : ஏற்காடு, அண்ணா பூங்காவில், 40வது மலர் கண்காட்சி, நான்கு லட்சம் மலர்களுடன், நேற்று முன்தினம் துவங்கியது. இரண்டாம் நாளான நேற்று, விடுமுறை நாள் ஞாயிற்றுக்கிழமை என்பதால், ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்திருந்து, மலர் கண்காட்சியை கண்டு களித்தனர்.

இதில், 20 ஆயிரம் ரோஜா மலர்களால், இந்தியா கேட், 15 ஆயிரம் ரோஜா மலர்களால் ஒற்றை கொம்பு காண்டாமிருகம், 15 ஆயிரம் ரோஜா மலர்களால், கொக்கு, 130 கிலோ கேரட்டில் டிராகன், 85 கிலோ பாகற்காயில் முதலை, தானியங்களில், ஐந்து அடி உயர பெண் சிலை ஆகியன, சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தது.இந்த உருவங்கள் அருகில் நின்று புகைப்படம் எடுக்க, பயணிகள் மிகுந்த ஆர்வம் காட்டினர். மேலும், அந்துரியம், ஜெரிபுரா, ஆஸ்டர், நாகலிங்கம், டேலியா, ரோஜா, சாமந்தி, உள்ளிட்ட வகைகளில், நான்கு லட்சம் மலர் செடிகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.மாடி வீடுகளில், காய்கறி தோட்டம் எவ்வாறு அமைப்பது குறித்து மாதிரி தோட்டம் அமைக்கப்பட்டதை, சுற்றுலா பயணிகளுக்கு அதிகாரிகள் விளக்கினர். தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் மலர்கண்காட்சியை கண்டு மகிழ்ந்தனர்.

அண்ணா பூங்காவில் நடந்த மலர் கண்காட்சியில், முதல் நாளான நேற்று முன்தினம், 5,000 பேரும், இரண்டாம் நாளான நேற்று, 6,500 பேரும் மலர் கண்காட்சியை கண்டு களித்தனர். இந்த மலர் கண்காட்சி நேற்றுடன் நிறைவு பெற்றது. இருந்தும், அண்ணா பூங்காவை சுற்றித்திரிந்த தெருநாய்களால், சுற்றுலா பயணிகள் அச்சமடைந்தனர்.ஏரியில், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் குப்பைகள் ஆங்காங்கு கொட்டப்பட்டிருந்தது. வெயிலின் தாக்கம் சற்று அதிகமாக இருந்ததால், சுற்றுலா பயணிகள், அவ்வப்போது ஆங்காங்கே ஓய்வெடுத்து, எல்லா இடங்களையும் சுற்றிப்பார்த்தனர். சில, சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் படகு சவாரி செய்தனர்.

மூடுவிழா கண்ட கோடை விழா?

ஏற்காடு பகுதியில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய செயலாளர் ஹெரால்டு விக்டர் என்பவர், "மூடு விழா கண்ட கோடைவிழா' என்ற தலைப்பில், கடந்த காலங்களில் கோடை விழா எப்படி நடந்தது என்பது பற்றியும், தற்போது, அவை நிறுத்தப்பட்டு, மலர் கண்காட்சியாக மாறியது குறித்து துண்டு பிரசுரம் வழங்கினார். அடுத்து "வரும் ஆண்டில், மே மாதத்தில், கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியை, எட்டு நாட்கள் நடத்த வேண்டும்' என, அந்த நோட்டீஸில், தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

## உணவு பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கூட்டம்

சேலம் : விஜயராகவாச்சாரியார் நினைவு நூலகம் வாசகர் மன்றம், சேலம் கன்ஸ்யூமர் வாய்ஸ் சார்பில், உலக சுற்றுச்சூழல் தின விழாவை முன்னிட்டு, சுற்றுப்புறச்சூழலும் உணவு பாதுகாப்பும் என்ற தலைப்பில் விழிப்புணர்வு கூட்டம், விஜயராகவாச்சாரியார் நினைவு நூலகத்தில் நடந்தது. கன்ஸ்யூமர் வாய்ஸ் தலைவர் பூபதி தலைமை வகித்தார்.

செயலாளர் சங்கர் வரவேற்றார். மாவட்ட நியமன அலுவலர் மற்றும், உணவு பாதுகாப்பு, மருந்து நிர்வாகத்துறை அலுவலர் அனுராதா பேசியதாவது: சுற்றுப்புறம் பாதிப்பால், 95 சதவீதம் உணவும் பாதிக்கிறது. ஜவ்வரிசி, பருப்பு, ஆயில் உள்ளிட்ட அனைத்து பொருட்களிலும் கலப்படம் உள்ளது. வெல்லம் உற்பத்தி செய்வதிலும், கலப்படம் செய்கின்றனர்.கறும்புச்சாறு இல்லாமலே வெள்ளம் தயாரிக்கின்ற நிலை, தற்போது உருவாகியுள்ளது. வெல்லம் தயாரிப்பதற்கு, சூப்பர் பாஸ்பரஸ் உள்ளிட்ட பொருட்களை கலக்கின்றனர். வெல்லம் கெட்டித்தன்மை வருவதற்கு, ஐந்து வகையான சோடாக்களையும், கலர் வருவதற்கு கலர்பொடிகளையும்

கலக்கின்றனர்.இது போன்ற கலப்படத்தை ஓமலூர் பகுதியில் தயார் செய்கின்றனர். ஆரம்ப கட்டத்தில் ஜவ்வரிசி, வெல்லம் ஆகியவற்றில் கலப்படம் செய்வதை தடுத்தோம். தற்போது, அவை மீண்டும் வளர்ச்சி பெற்று விட்டது. நூடுல்ஸினால் ஏற்படும் பாதிப்பு பற்றி பள்ளி, கல்லூரிகளில், விழிப்புணர்வு செய்கிறோம்.இவ்வாறு பேசினார்.பொருளாளர் பிரபாகரன், சேலம், கிரிலா ஹவுஸ் கிரிதரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். நூலகர் சின்னதம்பி நன்றி கூறினார்.

## 3,600 டன் மக்காச்சோளம் நாமக்கல் வரத்து

நாமக்கல் : நாமக்கல் ரயில்வே ஸ்டேஷனுக்கு, பீஹார் மாநிலம் கதிர்ஹரில் இருந்து, 3,600 டன் மக்காச்சோளம் வந்ததை, லாரிகள் மூலம் அரவை குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தமிழகம் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா, பீஹார் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து, அரிசி, கோதுமை, மக்காச்சோளம் போன்ற அத்தியாவசிய பொருட்கள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தீவன பொருட்கள், சரக்கு ரயில் பெட்டிகள் மூலமாக ஏற்றி வந்து, நாமக்கல் ரயில்வே ஸ்டேசனில் இறக்கி வைக்கப்படுகிறது.அவை, சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் குடோன்களுக்கு, லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு, அரவை நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில், நேற்று, பீஹார் மாநிலம், கதிர்ஹரில் இருந்து, சரக்கு ரயில் மூலம், 50 பெட்டிகளில், 3,600 டன் மக்காச்சோளம், நாமக்கல் ரயில்வே ஸ்டேஷன் வந்தது. அவற்றை லாரிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு அரவை குடோனுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## வெங்காய விலை தொடர் உயர்வு

ஈரோடு : திருமண முகூர்த்த நாள், பள்ளி திறப்பு போன்ற பல காரணத்தால், வெங்காய விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது.

இது குறித்து, மொத்த வெங்காய வியாபாரி ரவி கண்ணன் கூறியதாவது:கடந்த சில நாட்களாக, சிறிய வெங்காய விலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து, பெரிய வெங்காயத்தின் விலையும் கணிசமாக எகிறியுள்ளன.பொதுவாக சிறிய வெங்காயம், தமிழகத்தின் தென் மாவட்டங்களான தேனி, கம்பம், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் ஈரோடு, தர்மபுரி, சேலம், அரியலூர் போன்ற மாவட்டங்களில், அதிகளவு விளைச்சலாகிறது. கர்நாடகாவில் மைசூர், சாம்ராஜ் நகர், கொள்ளேகால், நஞ்சன்கோடு ஆகிய பகுதிகளில், சிறிய வெங்காயம் பெருமளவு கிடைக்கும்.பெரிய வெங்காயம், வடமாநிலமான மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்திர பிரதேசம் ஆகிய பகுதிகளில் மட்டுமே கிடைக்கும். பெரிய வெங்காயத்துக்கு, ஹோட்டல், திருமண மண்டபம், விடுதி போன்ற இடங்களில் அதிக வரவேற்பு உள்ளதால், அதனை அதிகம் பயன்படுத்துவர்.இந்நிலையில், கடந்த மாதம் சிறிய வெங்காயம் விலை, கிலோ, 18ல் இருந்து, 20 ரூபாய் வரை வியாபாரிகள் விற்பனை செய்தனர்.

தற்போது, வைகாசி மாதத்தில் திருமண நாட்கள் அதிகம் வருவதால், சிறிய வெங்காயம் விலை, கிலோவுக்கு, 15 ரூபாய் மொத்த விலையில் அதிகரித்து, 35 ரூபாய் க்கு வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.ஈரோடு காய்கறி மார்க்கெட்டுக்கு மட்டும் தினமும், 10 டன் சிறிய வெங்காயம் விற்பனைக்கு வந்தது. தற்போது, திருமண சீஸன்

என்பதால், 15 டன்னாக அதிகரித்துள்ளது. பெரிய வெங்காயம், கடந்த மாதமாக, ஒரு கிலோ, 27 ரூபாய்க்கு மொத்த விலையில் விற்பனையானது. தற்போது, பெரிய வெங்காயம், 13 ரூபாய் அதிகரித்து, கிலோ, 40 ரூபாய்க்கு வியாபாரிகள் விற்பனை செய்கின்றனர்.முகூர்த்த சீசன், பள்ளி விடுமுறை விட்டு அனைவரும் சொந்த ஊர் திரும்பியதாலும், பள்ளி விடுதிகள் திறப்பு போன்ற காரணத்தால், வெங்காய விலை திடீர் என அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**கோபி விற்பனை கூடத்தில் கொப்பரை தேங்காய் ஏலம்**

கோபி : கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நான்காம் தேதி நடந்த ஏலத்தில், 85 தேங்காய் பருப்பு மூட்டைகள், 4 லட்சத்துக்கு ஏலம் போனது.

வாரந்தோறும் வியாழனன்று, கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்றுவட்டாரபகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், கொப்பரை தேங்காயை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 83.19 முதல், 87.89 ரூபாய்க்கும், மாதிரி விலையாக, 85.99 ரூபாய்க்கும் ஏலம்போனது. ஏலத்தில், 23 விவசாயிகள், ஆறு வியாபாரிகள் பங்கேற்றனர். மொத்தம், 85 மூட்டைகள் வெறும், 4 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. இதுபற்றி கண்காணிப்பாளர் மகேந்திரசிங் கூறுகையில், ""மழையால் விவசாயிகள் கொப்பரை தேங்காய் உலர வைக்க முடியவில்லை. இதனால் கடந்த வாரம் வெறும், 85 மூட்டைகள் வரத்தானது," என்றார்.

## வேளாண் பல்கலை துணைவேந்தர் அழைப்பு; இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும்

திருச்சி : "படித்த இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டால், வாழ்க்கையில் வெற்றி பெறலாம்' என கோவை வேளாண் பல்கலையின் துணைவேந்தர் ராமசாமி பேசினார். திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஆகியவை சார்பில், "வேளாண்மையில் இளைஞர்களை ஈர்க்கவும், அவர்களை தக்க வைக்கவும்' என்ற தலைப்பில் பயிற்சி பட்டறை முகாம், அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரியில் துவங்கியது.சென்னை எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண் ஆராய்ச்சி அறக்கட்டளை நிர்வாக இயக்குனர் அஜய் கே பரிடா தலைமை வகித்தார். மாவட்ட கலெக்டர் பழனிசாமி, திருச்சி தோட்டக்கலை துணை இயக்குனர் தமிழ் களஞ்சியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில், தோட்டக்கலைத்துறை இயக்குனர் சித்திரசேனன் பேசுகையில், ""விஞ்ஞான பூர்வமாக விவசாயம் செய்தால், அதில் தோல்வி என்பதே இருக்காது. தரமுள்ள விதைகளை விவசாயத்தில் பயன்படுத்தினால், அதிக வருவாய் கிடைக்கும். கிருஷ்ணகிரி மாவட்டம், தளி பகுதியில் ரோஜா, லில்லியம் உள்ளிட்ட மலர்களை உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, ரூ.9.70 கோடியில் மாதிரி பண்ணைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது," என்றார்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலை துணை வேந்தர் ராமசாமி பேசியதாவது:இந்தியாவில், 262 மில்லியன் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியாகிறது. எனவே, அதை உற்பத்தி செய்யும் விவசாய தொழில் கண்டிப்பாக வருவாய் குறைந்த தொழிலாக இருக்க முடியாது. விவசாய துறையின் முன்னேற்றத்தால், இனி வரும் காலங்களில் உலகில் உள்ள நாடுகளுக்கு, இந்தியாவே உணவு உற்பத்தி செய்து கொடுக்கும் நிலை வரும்.விவசாய தொழிலில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் இளைய

தலைமுறையினருக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். படித்த இளைஞர்கள், கூட்டுத் தொழிலான விவசாயத்தின் மூலம் வாழ்க்கையில் வெற்றி பெறலாம். தகவல் தொழில்நுட்பத்தில் பணியாற்றும் பல இளைஞர்கள், 35 வயதுக்கு பின், வேலை இழக்கும் அபாயம் உள்ளது. ஆனால், விவசாயத்தில் அந்த நிலை இல்லை.வேளாண் துறையில், தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதை இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில், கால்நடை மண்டல இணை இயக்குனர் செல்லச்சாமி, வேளாண் துறை இயக்குனர் ராஜேந்திரன், நவலூர் குட்டப்பட்டு பஞ்சாயத்து தலைவர் அமுதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.பயிற்சி பட்டறையை முன்னிட்டு, திருச்சி மகளிர் தோட்டக்கலைத்துறை கல்லூரிகள் சார்பில், விவசாயத்தின் முக்கியத்துவம் குறித்து அறிந்து கொள்ள விவசாய பொருட்கள் அடங்கிய, 20 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இதில் வேளாண் தொடர்பான பல பொருட்கள், காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

உடையார்பாளையம் : உடையார்பாளையம் அருகே உள்ள இடையார் - ஏந்தல் பஞ்சாயத்தில் ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தில் விற்பனை மற்றும் வணிகம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.முகாமிற்கு, அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் மனோகரன் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் இளங்கோவன் முன்னிலை வகித்தார். வேளாண் விற்பனை மற்றும் வணிகதுறை உதவி வேளாண் அதிகாரி நல்லகுமார் வேளாண் பயிர் சாகுபடியில் அறுவடை பின் செய்தொழில் நுட்பங்களை பற்றி விளக்கி பேசினார். பயிற்சி முகாமில்

ஜெயங்கொண்டம் வட்டார விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் குழுவினர் கலந்து கொண்டனர்.

**தென்மேற்கு மழை தொடக்கம்; கடலை, உளுந்து சாகுபடிக்கு விவசாயிகள் தயார்**

புதுக்கோட்டை : புதுக்கோட்டையில், தென்மேற்கு பருவ மழை சீஸன் தொடங்கி நிலையில், கடலை, உளுந்து விவசாயம் செய்ய விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

கடந்த மாதம் அக்னி நட்சத்திர வெயில் துவக்கத்தில், புதுக்கோட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில், நான்கு நாட்கள் மழை பெய்தது. அப்போது, வெப்பம் தாக்கமும், தண்ணீர் தட்டுபாடும் சற்று குறைந்தது.அக்னி வெயில் முடிந்து, தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை சீஸன் தொடங்கி உள்ளது. இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில், அரிமளம், ஆலங்குடி, அண்டகுளம், பென்னமராவதி, விராலிமலை, இலுப்பூர், பகுதிகளில் பலத்த மழை பெய்துள்ளது.இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அத்துடன், இதையடுத்து மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில், கடலை, உளுந்து சாகுபடிக்காக வயல்களை தயார் படுத்தும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டனர். மேலும், இந்த மழை ஆலங்குடி பகுதிகளில் சாகுபடி செய்துள்ள வாழை, கடலை, உளுந்து போன்ற பயிர்களுக்கும், பூக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவத்துள்ளனர். கடந்த, மூன்று ஆண்டுகளாக பருவமழை இல்லாத நிலையில், விவசாயம் பாதிக்கப்பட்ட இருந்தன. இந்த ஆண்டு பருவ மழை சீஸன் தொடங்கியவுடன் மழை பெயந்து பெறும் நம்பிக்கையை ஏற்புடுத்தியுள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.இது தவிர, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், தென்மேற்கு பருவ மழை முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, நீர்நிலைகளில் ஏற்படும் உடைப்பை சரி செய்ய தேவையான மண் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்கவும், பேரிடர்கள் குறித்த தகவல்களை அனைத்து

தாசில்தார்களும்,பொதுமக்களும் உடனடியாக கலெக்டர் அலுவலகத்தில் இயங்கி வரும், 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும், அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**முருங்கை காய் ஒன்று ரூ. 10**

வத்தலக்குண்டு:வத்தலக்குண்டு காய்கறி சந்தையில் முருங்கை காய் ஒன்று பத்து ரூபாய்க்கு விற்றது.வத்தலக்குண்டு தினசரி காய்கறி சந்தைக்கு முருங்கை காய் வரத்து குறைவாக இருந்தது. திருமண முகூர்த்த நாள்,விசேஷ நாட்கள் தொடர்ந்து வருவதால் முருங்கை காய்க்கு தேவை அதிகரித்துள்ளது. கமிஷன் கடையில் 100 காய் கொண்ட கட்டு ஒன்று ரூ.300ல் இருந்து ரூ.600 வரை சில்லரை வியாபாரிகளுக்கு விற்கப்பட்டது. சில்லரை வியாபாரிகள் ஒரு காய் 10 ரூபாய்க்கு விற்றனர். குரும்பபட்டி விவசாயி மாயாண்டி கூறுகையில்,"" பல கிராமங்களில் தற்போது தான் முருங்கை விதைத்துள்ளனர். இது விளைச்சலுக்கு வருவதற்கு மூன்று மாதங்கள் ஆகும். சாகுபடி பரப்பளவு குறைவாக உள்ளதால் வரத்து குறைந்து, விலை கிடைக்கிறது'' என்றார்.

**அணைகள், குளங்கள் நிரம்பின நெல் சாகுபடி பணிகள் "ஜரூர்'**

பழநி: பழநிபகுதி அணைகள், குளங்களில் தண்ணீர் உள்ளதால் நெல்சாகுடி பணிகளை விவசாயிகள் வேகமாக துவங்கியுள்ளனர். பழநி சுற்றுப்பகுதியில் 5000 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்கின்றனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால் பெரும்பாலான விவசாயப்பணிகள் பாதிக்கப்பட்டது. இவ்வாண்டு கோடை மழை எதிர்பார்த்ததைவிட அதிகமாக பெய்து அணைகள், குளங்களில் தண்ணீர் உள்ளது. இதனால் பழநி- கொடைக்கானல் ரோடு, அய்யம்புள்ளி, பாலாறு, பொருந்தலாறு அணைப்பகுதி, பாலசமுத்திரம் ஆகிய பகுதியைச் சேர்நத விவசாயிகள் நெல்சாகுபடி பணியை மேற்கொண்டு உள்ளனர். வேளாண்துறை அதிகாரி ஒருவர்

கூறுகையில்,""இரண்டு ஆண்டுகளுக்குபின் கோடை மழை பெய்து அணைகள், குளங்களில் தண்ணீர் உள்ளதால் வாய்க்கால் மற்றும் கிணற்றுப்பாசன விவசாயிகள் நெல்நடவு செய்துள்ளனர். போதிய தண்ணீர் உள்ளதால் இவ்வாண்டு விளைச்சலும் நன்றாக இருக்கும்," என்றார்.

## இரண்டாம் போக நெல்சாகுபடி களையெடுப்பு பணி மும்முரம்

தேவதானப்பட்டி:ஜெயமங்கலம், மேல்மங்கலம், வடுகபட்டி பகுதியில் இரண்டாம் போக நெல்சாகுபடியில் களை எடுப்பு பணி நடந்து வருகிறது.பெரியகுளம் வராகநதியில் வரும் நீரை ஆதாரமாக வைத்து வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், சில்வார்பட்டி, நல்லகருப்பன்பட்டி, குள்ளப்புரம் கிராமங்களில் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் முதல்போக நெல் சாகுபடி செய்யப்பட்டது. அதன் பிறகு கிணற்றுப் பாசன விவசாயிகள் மட்டும் இரண்டாம் போக நெல் சாகுபடி பணியில் ஈடுபட்டனர். கடந்த மாதம் பரவலாக மழை பெய்ததால் வராகநதியில் நீர்வரத்து ஏற்பட்டது. இதனால் கண்மாய்கள் நிறைந்தன. இதனால் விவசாயிகள் குறுகிய கால நெல் ராகங்களை வாங்கி நேரடிவிதைப்பு செய்தனர். விதைப்பு செய்து 20 நாட்களில் இருந்து 35 நாட்கள் ஆகிறது. தற்போது களை எடுப்பு பணி நடந்து வருகிறது. தொடர்ந்து வேலை கிடைப்பதால் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதனால் வேலை தேடி வெளியூர் செல்வதை தற்காலிகமாக கூலித் தொழிலாளர்கள் நிறுத்தியுள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்




இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் வேகமாகப் போய்க் கொண்டிருப்பது பெருமை அளிக்கிறது. சீனாவின் வளர்ச்சியைக்கண்டு ஏங்கிக்கொண்டிருந்த இந்திய மக்களுக்கு, கடந்த ஒரு ஆண்டில் நாட்டின் வளர்ச்சி விகிதம் சீனாவை முந்த இந்தியாவாலும் முடியும் என்ற நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் அளித்துள்ளது. 2013–2014–ம் நிதி ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி 6.9 சதவீதமாக இருந்த நிலையில், கடந்த நிதி ஆண்டின் இறுதி காலாண்டில் 7.5 சதவீதமாகவும், முழு ஆண்டில் 7.3 சதவீதமாகவும் இருக்கிறது. இதேவேகத்தில் போனால் நிச்சயமாக இந்த ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி 8 சதவீதத்தை அடைந்துவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. உற்பத்தித்துறையில் நல்ல வளர்ச்சிக்கண்டு சாதனை படைத்த நாடு, விவசாய வளர்ச்சியில் ஏற்கனவே இருந்த நிலையைவிட மிகவும் பின்தங்கிவிட்டது வருத்தத்துக்குரியது. விவசாயமும், தொழிலும் நாட்டின்

இருகண்கள் போன்றது. இரண்டுமே ஒன்று போல வளர்ச்சியை அடைந்தால்தான் பீடுநடை போட்டதுபோல இருக்கும். 7.3 சதவீதம் வளர்ச்சியை சந்தித்த வேளையில், விவசாயத்தின் வளர்ச்சி .2 சதவீதம்தான் என்பது மிகவும் வேதனைக்குரியது. கடந்த ஆண்டு வளர்ச்சி 3.7 சதவீதமாக இருந்த நிலையில், இவ்வளவு சரிந்திருப்பதை மத்திய அரசாங்கம் கவலையோடு கவனத்தில் கொள்ளவேண்டும். நாட்டில் 50 சதவீதத்துக்கு மேலான மக்கள் விவசாயத்தையே நம்பி இருக்கிற சூழ்நிலையில், இந்த ஆண்டு மத்திய அரசாங்கம் அதில் சிறப்பு உத்வேகத்தைக் காட்டவேண்டும். ஏனெனில், விவசாயமும் தொழிலோடு வளர்ந்தால்தான் நிலையான நீடித்த வளர்ச்சி இருக்கும். சீனாவின் பொருளாதார சீர்திருத்தமே விவசாயத்தில் இருந்துதான் தொடங்கியது. 1978–1984 ஆகிய 6 ஆண்டுகள்தான் சீனாவின் வளர்ச்சிக்கான தொடக்க ஆண்டுகளாகும். முதலில் விவசாய வளர்ச்சியைக் கையில் எடுத்த சீனா, விவசாய மேம்பாட்டைத்தான் தொடங்கியது. இதற்காக வேளாண் விலை நிர்ணயத்துக்கான அனைத்து கட்டுப்பாடுகளையும் தளர்த்தியது. இதன் விளைவாக 7.1 சதவீதம் விவசாயம் வளர்ச்சி அடைந்தது. விவசாய வருமானம் 14 சதவீதம் உயர்ந்தது. இந்த 6 ஆண்டுகளில் கிராமப்புறங்களில் உள்ள ஏழ்மை பாதியாக குறைந்தது. தொடர்ந்து கிராமப்புறங்களில் பணப்புழக்கம் அதிகமாகி, மக்களின் வாங்கும் சக்தி அபரிமிதமாக உயர்ந்தது. அவர்கள் கையில் உள்ள பணத்தை வைத்து முதலில் டெலிவிஷன், ரெப்ரிஜிரேட்டர் போன்ற பொருட்களை வாங்க நாடி வந்ததைத்தொடர்ந்துதான் தொழில் வளர்ச்சியும் வேகம் எடுத்தது. இதை உறுதிப்படுத்தும் வகையில்தான் இந்தியாவிலும் கடந்த ஆண்டு விவசாய வளர்ச்சியில் ஏற்பட்ட தொய்வு காரணமாக இருசக்கர வாகனங்கள், டிராக்டர்கள் விற்பனை சரிந்துள்ளது. ஆக, விவசாயியின் கையில் பணம் இல்லையென்றால், அதன்தாக்கம் உற்பத்தி துறைக்குள்ளும் பாய்கிறது.

இன்றைய சூழ்நிலையில், இந்தியாவும் இந்த ஆண்டை விவசாய வளர்ச்சி ஆண்டாக செயல்படுத்த வேண்டும். பிரதமர் நரேந்திர மோடி விவசாயியின் உற்பத்தி செலவில் 50 சதவீதத்துக்குமேல் வருவாய் கிடைக்கும் வகையில் திட்டங்கள் தீட்டப்படும் என்ற வாக்குறுதியை இந்த ஆண்டு நிறைவேற்ற வேண்டும். தரிசாக கிடக்கும் நிலங்களில் குறைந்தநீரை பயன்படுத்தி சாகுபடி செய்யும் பயிர்களை விதைக்க ஊக்கம் அளிக்க வேண்டும். விவசாயத்தில் சிறந்து விளங்கும் அதிக மழை காணாத இஸ்ரேல் நாட்டுக்கு, இதுவரையில் இந்திய பிரதமர் யாரும் போனதில்லை. முதல் முறையாக விரைவில் மோடி செல்கிறார். அந்த நாட்டு தொழில்நுட்பங்களை இந்தியாவில் கடைப்பிடிக்கும் வகையிலான ஒப்பந்தங்களை போட்டுக் கொண்டு வரவேண்டும், விவசாய வளர்ச்சி காணவேண்டும் என்பதே விவசாயிகளின் ஆசையாகும்.

**பொள்ளாச்சியில் குப்பையில் இருந்து மண்புழு உரம் தயாரிக்கும் திட்டம் தொடக்கம்**



பொள்ளாச்சி நகராட்சியில் மக்கும் குப்பையில் இருந்து மண்புழு உரம் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

மண்புழு உரம் பொள்ளாச்சி நகராட்சி 36 வார்டுகளை கொண்டது. இந்த வார்டு பகுதிகளில் இருந்து தினமும் சுமார் 35 டன் மக்கும் குப்பைகள் கிடைக்கின்றன. இந்த குப்பைகளில் இருந்து மண்புழு உரம் தயாரிக்க நகராட்சி நிர்வாகம் முடிவு செய்தது. அதன்படி மண்புழு உரம் தயாரிக்க காந்தி மார்க்கெட்டுக்கு பின்புறம் ஆடுவதை கூடம் அருகே இடம் தேர்வு செய்யப்பட்டு, 20 தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. இதில் 2 தொட்டிகளில் தற்போது மக்கும் குப்பைகளோடு, மாட்டு சாணம் போடப்பட்டு மண்புழுக்கள் விடப்பட்டுள்ளன. மண்புழுக்களின் எண்ணிக்கை அதிகரித்ததும், அனைத்து தொட்டிகளிலும் உரம் தயாரிக்கப்பட உள்ளது.

விழிப்புணர்வு

இது குறித்து நகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:-

மக்கும் குப்பைகளில் இருந்து மண்புழு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களிடம் இருந்து மக்கும், மக்காத குப்பை என்று பிரித்து வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 35-வது வார்டில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி பொதுமக்களிடம் இருந்து குப்பைகளை வாங்கி, அந்த பகுதிலேயே குப்பைகளை பிரித்து எடுக்க இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. மக்கும் குப்பைகளை மண்புழு உரம் தயாரிக்க கொண்டு வரப்படும். மக்காத குப்பைகள் நல்லூரில் உள்ள குப்பை கிடங்கிற்கு கொண்டு செல்லப்படும்.

பொதுமக்கள் துப்புரவு பணியாளர்களிடம் மக்கும் குப்பை, மக்காத குப்பை பிரித்து கொடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது. இதற்காக வீடுதோறும் காலை நேரத்தில் கல்லூரி மாணவ-மாணவிகள் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துவார்கள். 35-வது வார்டை தொடர்ந்து அனைத்து வார்டுகளிலும் இந்த திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது. நகராட்சி மூலம் தயாரிக்கப்படும் மண்புழு உரம் பொதுமக்கள், விவசாயிகளுக்கு குறைந்த விலைக்கு விற்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**காஞ்சீபுரத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**



காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வி.கே. சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

காஞ்சீபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 19-ந் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு, காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இதற்கு மாவட்ட கலெக்டர் தலைமை தாங்க உள்ளார். இதில் விவசாயிகள் கலந்து கொண்டு மனுக்களை அளிக்கலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வேளாண் அதிகாரிகள்-களப்பணியாளர்கள் மண் மாதிரிகள் சேகரிப்பு கலெக்டர் ஜெயந்தி நேரில் ஆய்**



க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வேளாண் அதிகாரிகள்-களப்பணியாளர்கள் மண் மாதிரிகளை சேகரித்தனர். அதனை மாவட்ட கலெக்டர் ஜெயந்தி நேரில் ஆய்வு செய்தார்.

ஆய்வு

கரூர் மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில் மண்மாதிரிகள் சேகரித்து மண்பரிசோதனைகள் செய்து மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இதையொட்டி க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் எல்லைக்காட்டுப்பகுதியில் வேளாண் அதிகாரிகள் மற்றும் களப்பணியாளர்களால் மண்மாதிரிகள் சேகரிக்கப்படுவதை மாவட்ட கலெக்டர் ஜெயந்தி பார்வையிட்டு ஆய்வு செய்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

கரூர் மாவட்டத்தில் விவசாயிகள் மண்ணின் தரம் குறித்து ஆய்வு செய்து அதற்கேற்ப பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக வேளாண்மைத்துறையின் மூலம் மண்மாதிரி எடுத்து ஆலோசனை

வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் உரங்களின் தேவை குறைந்து விடும். இதனால் தேவையில்லாத இடத்தில் தேவையில்லாத நேரத்தில் உரமிடுவதால் மண்ணின் வளம் பாதிக்கப்படுவதோடு, விவசாயிகளுக்கு அதிக அளவில் செலவு ஏற்படுகிறது. இதனை தடுக்கும் விதமாக நமது மண்ணில் என்ன வளம் உள்ளது அது எவ்வளவு உள்ளது என்பதை கண்டறிந்து தேவைக்கேற்ப உரத்தினை இட வேண்டும். இதற்கு மண் பரிசோதனை மிகவும் அவசியமாகும். மத்திய, மாநில அரசுகளின் நிதியுதவியோடு 'மண்வள அட்டை இயக்கம்' என்ற திட்டம் நடப்பு ஆண்டில், கரூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. மண் பரிசோதனை

கரூர் மாவட்டத்திலுள்ள 203 வருவாய்க் கிராமங்களில் உள்ள 1,46,051 பண்ணைக் குடும்பங்களுக்கு, கிராமத்தில் இறவை நிலமெனில் 2.5 எக்டேருக்கு ஒரு மாதிரியும், மானாவரி எனில் 10 எக்¢டேருக்கு ஒரு மாதிரியும் தொகுப்பு அடிப்படையில் மண் பரிசோதனை ஆய்வுக் கூட வேளாண்மை அலுவலரின் மேற்பார்வையில் சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர்களால் எடுக்கப்படும். மாதிரி எடுக்கும் பணி பயிரில்லாத காலகட்டத்தில் எடுக்கப்பட்டு அதன்பின் ஆய்வு பணி மேற்கொள்ளப்படும். இதற்குரிய கட்டணத்தை அரசு ஏற்றுக் கொள்ளும். ஆய்வு பணி முடிந்த பிறகு விவசாயிகளின் அடிப்படை விபரத்துடன் ஆதார் எண் போன்றவை குறிக்கப்பட்டு மத்திய அரசு வடிவமைத்த தேசிய அளவிலான மண்வள அட்டை அனைத்து பண்ணைக் குடும்பங்களுக்கும் வழங்கப்படும். இன்று (நேற்று) க.பரமத்தி மற்றும் தென்னிலை ஊராட்சிகளில் 40 மண் மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை கரூர் மாவட்டத்தில் 4,213 மண்மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. இதே போல் மேலும் மற்ற பகுதிகளிலும் விவசாயிகள் தங்கள் நிலங்களில் மண் பரிசோதனை செய்து வேளாண் அலுவலர்களின் ஆலோசனையை பெற்று விவசாய பணிகளை மேற்கொண்டு பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வின் போது வேளாண்மை துணை இயக்குநர் மதனகோபால், வேளாண்மை உதவி இயக்குநர்கள் பாலகிருஷ்ணன், சிவானந்தம் மற்றும் வேளாண்மை அலுவலர் ரேணுகாதேவி ஆகியோர் உடன் இருந்தனர்.

**பச்சை தேயிலை விலை வீழ்ச்சி: மேரக்காய் பயிரிட ஆர்வம் காட்டும் விவசாயிகள்**



மஞ்சூர்,

பச்சை தேயிலை விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், மேரக்காய் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

பச்சை தேயிலை விலை வீழ்ச்சி

நீலகிரி மாவட்டத்தின் முதுகெலும்பாக தேயிலை விவசாயம் உள்ளது. இதை நம்பி சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளிகள் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். ஆனால் சமீப காலமாக பச்சை தேயிலை வரலாறு காணாத விலை வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. தற்போது ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.5 முதல் ரூ.7 வரையிலான விலையே கிடைக்கிறது.

இதனால் தேயிலை விவசாயத்தை நம்பி வாழ்க்கை நடத்தி வந்த விவசாயிகள் மற்றும் கூலித்தொழிலாளிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. வேறு பிழைப்பு இன்றி நிர்க்கதியற்று போய் இருக்கும் அவர்கள் நீலகிரியில் இருந்து சமவெளி பகுதிகளான கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களுக்கு வேலை தேடி இடம் பெயர்ந்து வருகிறார்கள்.

இந்த நிலையிலும், பச்சை தேயிலைக்கு குறைந்த பட்ச விலையாக கிலோவுக்கு ரூ.30 நிர்ணயம் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். ஆனால் அவர்களின் கோரிக்கை கண்டு கொள்ளப்படாமலேயே இருக்கிறது.

**மேரக்காய் பயிரிடுவதில் ஆர்வம்**

இதனால் நீலகிரி மாவட்ட விவசாயிகளில் பெரும்பாலானவர்கள் தேயிலை விவசாயத்தையே கைவிடும் நிலையில் இருக்கிறார்கள். பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் பச்சை தேயிலை பறிக்கப்படாமல் வீணாகி வருகிறது. இதையடுத்து மாற்று வழியாக விவசாயிகள் மேரக்காய் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

குறிப்பாக மஞ்சூர் பகுதி விவசாயிகள் தேயிலை விவசாயத்தை கைவிட்டு மேரக்காய் விவசாயத்துக்கு மாறி வருகிறார்கள். அங்குள்ள தேயிலை தோட்டங்களின் அருகிலேயே விவசாயிகள் பந்தல் அமைத்து மேரக்காய் பயிரிட்டு உள்ளனர்.

மஞ்சூர் பகுதியில் உள்ள கரியமலை, தொட்டக்கம்பை, கீழ்குந்தா, மட்டக்கண்டி, குந்தாபாலம் ஆகிய பகுதிகளில் பயிரிடப்பட்டு இருந்த மேரக்காய் பயிர்களில் காய்கள் காய்த்து அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. அவற்றை அறுவடை செய்யும் விவசாயிகள் லாரிகள் மூலம் மேட்டுப்பாளையத்துக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

தற்போது ஒரு கிலோ மேரக்காய்க்கு ரூ.15 முதல் ரூ.20 வரை விலை

கிடைப்பதாக தெரிகிறது. அதன் மூலம் தங்களது அன்றாட தேவைகளை நிறைவேற்றி வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஏற்காட்டில் 2-வது நாளாக மலர்க்கண்காட்சியை கண்டு ரசிக்க சுற்றுலா பயணிகள் குவிந்தனர்**



ஏற்காடு,

மலர்க்கண்காட்சியை கண்டு ரசிக்க ஏற்காட்டில் 2-வது நாளாக சுற்றுலா பயணிகள் குவிந்தனர்.

மலர்க்கண்காட்சி

சேலம் மாவட்டத்தில் புகழ்பெற்ற சுற்றுலா தலமான ஏற்காட்டில் 40-வது மலர்க்கண்காட்சி நேற்று முன்தினம் தொடங்கியது. கோடை விடுமுறை முடிந்து தாமதமாக மலர்க்கண்காட்சி தொடங்கியதால் முதல்நாளில் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறைவாகவே இருந்தது. இருப்பினும், தோட்டக்கலைத்துறை மூலம் கண்காட்சியில் சுற்றுலா பயணிகளின் கண்களுக்கு விருந்து அளிக்கும் வகையில் 15 ஆயிரம் ரோஜா மலர்களில் வடிவமைக்கப்பட்ட காண்டாமிருகம், கொக்கு, இலை

மற்றும் 15 ஆயிரம் பூக்களால் அமைக்கப்பட்டிருந்த இந்தியா கேட், 10 ஆயிரம் பூக்களில் கொக்கு, மாதிரி மாடி காய்கறி தோட்டம் ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளது.

ரசித்து பார்த்தனர்

இதுதவிர, காய்கறிகளால் மிகவும் தத்ரூபமாக செய்யப்பட்ட முதலை, டிராகன், கொக்கு, வாத்து மற்றும் இலைகளால் உருவாக்கப்பட்ட கிளி, குட்டி யானை, 12 அடி உயரத்தில் நவதானிய நாயகி ஆகியவற்றை சுற்றுலா பயணிகள் மிகவும் ரசித்து பார்வையிட்டனர். மேலும், அதன் அருகே நின்று சிலர் செல்போன் மற்றும் கேமரா மூலம் புகைப்படங்களை ஆர்வமுடன் எடுத்துக்கொண்டனர்.

முதல்நாளான நேற்று முன்தினம் 4 ஆயிரத்து 469 பேர் அண்ணாப்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள மலர்க்கண்காட்சியை கண்டு ரசித்தனர். இதன் மூலம் ரூ.65 ஆயிரத்து 955 அரசிற்கு வருவாய் கிடைத்துள்ளதாகவும், அதேபோல் ரோஜா தோட்டம் மற்றும் தாவரவியல் பூங்காவை கண்டு ரசித்த வகையில் ஆயிரத்து 450 பேர் மூலம் ரூ.38 ஆயிரத்து 490 வருவாய் கிடைத்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

விடுமுறையில் கூட்டம்

இந்தநிலையில், மலர்க்கண்காட்சி நிறைவு நாளான நேற்று விடுமுறை தினம் என்பதால் ஏற்காட்டில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது. சேலம் மாவட்டம் மட்டுமின்றி நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏற்காட்டில் குவிந்தனர். மலர்க்கண்காட்சி நடக்கும் அண்ணா பூங்காவில் சுற்றுலா பயணிகள் குவிந்ததால் கூட்ட நெரிசல் காணப்பட்டது.

மேலும், ஏற்காட்டின் முக்கிய இடங்களான மான் பூங்கா, லேடீஸ் சீட், ஜென்ஸ் சீட், பக்கோடா பாயிண்ட், தாவரவியல் பூங்கா, ரோஸ் கார்டன்,

சேர்வராயன் கோவில், கிளியூர் நீர்வீழ்ச்சி ஆகிய பகுதிகளுக்கு சுற்றுலா பயணிகள் சென்று இயற்கை அழகை ரசித்தனர். படகு இல்லத்திலும் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகளவில் காணப்பட்டது. கூட்டம் அதிகமாக இருந்ததால் சுற்றுலா பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்து படகுசவாரி செய்து மகிழ்ச்சி அடைந்தனர்.

கூடுதல் பஸ்கள்

மலர்க்கண்காட்சி நடந்த 2 நாட்களில் மட்டும் சுமார் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் ஏற்காட்டிற்கு வந்து சென்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று விடுமுறை தினம் என்பதால் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக கூடுதல் சிறப்பு பஸ்களும் இயக்கப்பட்டன.

**கருப்பு பன்னீர் திராட்சை வரத்து குறைவு; விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**



கம்பம்,

கம்பம் பகுதியில் வரத்து குறைவால் கருப்பு பன்னீர் திராட்சை விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கருப்பு பன்னீர் திராட்சை

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, ஓடைப்பட்டி, அணைப்பட்டி நாராயணத்தேவன்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கருப்பு பன்னீர் திராட்சை தோட்டங்கள் அதிகம் உள்ளன.

இங்கு விளையும் திராட்சைகள் தரம் பிரிக்கப்பட்டு விற்பனைக்கு தயார் செய்யப்படுகின்றன. பின்னர் அவை மதுரை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் கேரளா மாநிலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பாக பெய்த தொடர் மழையின் காரணமாக திராட்சை கொடிகளில் செவட்டை நோய் தாக்குதல் ஏற்பட்டது. இதனால் வரத்து குறைந்துள்ளது.

விவசாயிகள் மகிழ்ச்சி

இந்த நிலையில் தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளது. இதனால் விளைச்சல் குறைந்து வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு கிலோ ரூ.15–க்கு விற்பனை செய்யப்பட்ட கருப்பு பன்னீர் திராட்சை விலை உயர்ந்து உள்ளது. தற்போது கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகளிடம் கேட்ட போது 'கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த தொடர் மழையின் காரணமாக செடிகளில் திராட்சைகளில் வெடிப்புகள் ஏற்பட்டு மகசூல் பாதிக்கப்பட்டது. இதனால் தற்போது வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. இது விவசாயிகளுக்கு ஆறுதலாக உள்ளது' என்றனர்.

**மடத்துக்குளம் பகுதியில் நுங்கு விற்பனை அமோகம்**



மடத்துக்குளம்,

கற்பக விருட்சம் என்றழைக்கப்படும் பனைமரத்தில் இருந்து கிடைக்கக்கூடிய நுங்கு, பதனீர், பனங்கிழங்கு, பனம்பழம், பனஞ்சாறு, கிழங்கு, கருப்பட்டி, பனங்கற்கண்டு, ஓலை, நார், அனைத்தும் பயன்தரக்கூடியதாகும். குறிப்பாக நுங்கில் வைட்டமின்கள் அதிகமாக உள்ளன. மேலும் அதில் குளிர்ச்சி தரும் சத்துகள் இருப்பதால் அம்மை நோய்க்கு மருந்தாகவும், குடல் புண்களை ஆற்றும் தன்மை கொண்டதாகவும் விளங்குகிறது. தற்போது உடுமலை மற்றும் மடத்துக்குளம் பகுதிகளில் உள்ள பனை மரங்களில் நுங்கு அதிக அளவு காய்த்துள்ளது. அவற்றை பறித்து பிரதான சாலை ஓரங்களில் வைத்து விற்பனை செய்கிறார்கள். இப்படி விற்பனை செய்யப்படும் நுங்கிற்கு நல்ல வரவேற்பு உள்ளது. கார்களில் செல்பவர்கள் கார்களை நிறுத்தி நுங்கை வாங்கிச்செல்கிறார்கள்.

இது குறித்து நுங்கு விற்பனை செய்பவர்கள் கூறியதாவது:–

பனை மரங்களில் அனைத்து வித பருவநிலையையும் தாங்கி வளரக்கூடியது. ஆனால் பல்வேறு காரணங்களால் பெருமளவு பனைமரங்கள் அழிக்கப்பட்டு விட்டன.

பனை மரங்களில் இருந்து கிடைக்கும் பதனீர் மற்றும் நுங்குகளை பறிக்க ஆட்கள் கிடைப்பது இல்லை. மேலும் பனை மரங்களில் ஏறி நுங்கு பறிப்பது என்பது ஆபத்தானது. பனையில் இருந்து கீழே விழுந்து விட்டால் வாழ்க்கை முடிந்து விடும். இதனால் பெரும்பாலானவர்கள் இந்த தொழிலை விரும்புவது இல்லை. நாங்கள் பல்வேறு குதிகளுக்கு சென்று பனைமரங்களில் ஏறி நுங்கு பறித்து வருகிறோம். ஒரு நுங்கை ரூ.2 முதல் ரூ.3 வரை விற்பனை செய்கிறோம். இதனால் குறைந்த அளவு லாபம் கிடைக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

தினகரன்

**விவசாயத்துறையில் இளைஞர்கள் கால்பதிக்க இதுவே சரியான தருணம்பயிற்சி பட்டறையில் பேச்சு**

திருச்சி, : விவசாயத்துறையில் இளைஞர்கள் கால்பதிக்க இதுவே சரியான தருணம் என்று பயிற்சி பட்டறையில் அறிவுரை வழங்கப்பட்டது. திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மகளிர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், எம்எஸ்எஸ்ஆர் அறக்கட்டளை சார்பில் வேளாண்மையில் இளைஞர்களை ஈர்க்கவும் அவர்களை தக்க வைக்கவும் என்ற தலைப்பில் பயிற்சி பட்டறை நேற்று துவங்கியது. எம்எஸ்எஸ்ஆர் அறக்கட்டளை செயல் இயக்குனர் அஜய்பரிடா பேசுகையில், விவசாயிகளின் கருத்துகளை கொள்கை முடிவாக மாற்றவதற்கு எடுத்து

செல்லும் பாலமாக இந்த பயிற்சி பட்டறை அமையும் என்றார். கலெக்டர் பழனிச்சாமி பேசியதாவது: மதிப்பு குறைந்த தொழிலாக விவசாயம் இன்று பார்க்கப்படுகிறது. இந்த மனப்பான்மை மாற வேண்டும். விவசாயமின்றி எதுவும் இல்லை என்பதை உணர வேண்டும். விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தை புகுத்த வேண்டும். இளைஞர்கள் விவசாயத்தின் மீது கவனம் செலுத்த வேண்டும். இன்று லாபகரமான தொழிலாக விவசாயம் மாறியுள்ளது. இளைஞர்கள் விவசாயத்தை விட்டு செல்லாமலும், விவசாயத்தை விட்டு சென்ற இளைஞர்கள் விவசாயம் பக்கம் தங்கள் கவனத்தை திருப்ப வேண்டும். கிராமத்தில் உள்ள விவசாயம் செய்யும் இளைஞர்களுக்கு பெண் கொடுக்க தயங்குகின்றனர். இதனால் தான் இளைஞர்கள் விவசாயத்தை விட்டு செல்கின்றனர். பெண்களும் தங்களது நாட்டத்தை விவசாயத்தின் பக்கம் செலுத்த வேண்டும். இந்த அவசர உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியால் பல நோய்களுக்கு மனிதன் ஆளாகிறான். விவசாயம் செய்பவர்கள் தான் இயற்கையுடன் இணைந்து நலமான, வளமான, நிம்மதியான வாழ்வு வாழ்கின்றனர். உணவுத்தேவை அதிகரித்து, உற்பத்தி செய்யும் விளை நிலங்கள் குறைந்து வருகிறது. எனவே கவனத்துடன் இளைஞர்கள் விவசாயத்துறையில் கால் பதிக்க இதுவே சரியான தருணம் என்றார்.போதிய விளம்பரம் இல்லை இளைஞர்களை ஈர்க்கவும், தக்க வைக்கவும் தான் இந்த பயிற்சி பட்டறை நடத்தப்படுகிறது.

ஆனால் போதிய விளம்பரம் இல்லாததால், குறைந்தளவு இளைஞர்களே வந்திருந்தனர். விவசாயத்தில் சாதித்த வாழை கருப்பையா போன்ற சில முதிர்ந்த விவசாயிகள் மட்டுமே தங்கள் சாதனைகளை விவரித்தனர். இளம்விவசாயிகளை அழைத்து வந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். கண்களுக்கு விருந்து படைக்கும் வகையில் விவசாய

விளைப்பொருட்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தது. எள் மூலம் தயாரிக்கப்பட்ட ரங்கநாதர் உருவம் அனைவரையும் கவர்ந்தது. ஐந்தடி வளரும் செடி முருங்கைக்காய், கைக்குத்தல் அரிசி, மாங்காய், கத்திரி, பலா, முந்திரி, பாமாயில், இளநீர் என பல்வேறு பகுதியை சேர்ந்த விளைப்பொருட்கள் இடம்பெற்றிருந்தன.

## மானிய விலையில் நவீன வேளாண் இயந்திரங்கள் விவசாயிகளுக்கு அழைப்பு

திருச்சி,: திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் நவீன வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வழங்கப்படுகின்றன. இதில் பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விவசாயத்தை லாபம் தரும் தொழிலாக மேற்கொள்வதில் வேளாண்மை இயந்திரங்களின் பங்கு மிக முக்கியமானது. கடந்த சில ஆண்டுகளாக கூலியாட்கள் பற்றாக்குறை மற்றும் பயிரிடும் செலவினம் அதிகரிப்பால் அதை ஈடு செய்ய வேளாண்மை இயந்திரங்களை பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் விவசாயிகள் உள்ளனர். ஆனால் அவற்றை சிறு, குறு விவசாயிகள் வாங்கி பயன்படுத்த இயலாத நிலையில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாடகையில் அனைவருக்கும் கிடைக்கும் வகையில் விவசாயிகள் பங்கேற்புடன் இந்த வாடகை திட்ட மையம் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.25.00 லட்சத்தில் செயல்படவுள்ளது. விவசாய குழுவினர் அல்லது தனிப்பட்ட விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் 40 சதவீதம் தொகை ரூ.10 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. சூரியசக்தி மூலம் செயல்படும் சோலார் உலர்த்திகளில் வாழைப்பழம், மஞ்சள், வெங்காயம், காய்கறிகள், பழங்கள், வாசனை பொருட்கள், மூலிகை பொருட்கள் என அனைத்து பொருட்களையும் அதன் உயிர்ச்சத்து வீணாகாமலும், மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்ற ‘சோலார் உலர்த்திகள்’ அமைக்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

400 சதுரஅடி பரப்பில் உத்தேச மதிப்பீடு ரூ.3.97 லட்சத்தில் அதிகபட்சமாக 50 சதவீதம் மானியத்தில் அதாவது ரூ.1.84 லட்சம் வரை மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தில் விவசாய குழுவினர் அல்லது தனிப்பட்ட விவசாயி பயன்பெறலாம். விருப்பமுள்ள திருச்சி மற்றும் ஸ்ரீரங்கம் கோட்ட விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் வேளாண் பொறியியல் துறை, எண் 2, ஜெயில் கார்னர், திருச்சி - 620020' முசிறி கோட்ட விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, 18 கண்ணதாசன் தெரு, முசிறி- 621211, லால்குடி கோட்ட விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் வேளாண் பொறியியல் துறை, லூர்து இல்லம், 8வது குறுக்கு தெரு, காமராஜர் நகர் தெற்கு, லால்குடி- 621 601 அலுவலகங்களை அணுகலாம்.

**கம்பு பயிரிட ஏற்ற தருணம் வேளாண்துறை ஆலோசனை**

பழநி, : பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் தற்போது விவசாய பணிகள் துவங்கி உள்ளன. இறவை பாசன வசதி உள்ள விவசாயிகள் கம்பு பயிரிடுவது ஏற்ற தருணமாகும். கோ 7, கோ (சியு) 9, ஐசிஎம்வி 221, ராஜ் 171, எக்ஸ் 7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். எக்டேருக்கு 3.75 கிலோ விதை தேவைப்படும். நாற்றாங்கால் எக்டேருக்கு 7.5 சென்ட் அளவிற்கு இருக்க வேண்டும். 3*1.5 மீட்டர் அளவு கொண்ட 6 படுக்கைகள் 1 சென்டில் அமைத்து அரை மீட்டர் கால்வாய் அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றி அமைக்க வேண்டும்.

எக்டேருக்கு 750 கிலோ தொழுஉரம் இடவேண்டும். தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் 1 கிலோ உப்பினை கரைத்து விதைகளை அதில் கொட்டி மிதக்கும் விதைகளை நீக்க நல்ல தண்ணீர் கொண்டு 3,4 முறை விதைகளை கழுவி பின்பு நிழலில் உலர்த்த வேண்டும். தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் தாக்காமல்

இருக்க குளோரி பைபாஸ் 36 டபிள்யூ.எஸ்.வி அல்லது பாசலோன் 35 இசி 4 மில்லியுடன் 5 கிராம் பசை இவற்றை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைக்க வேண்டும். அடிச்சாம்பல் நோய் தாக்காமல் இருக்க மெட்டலாக்சில் 6 கிராம் உடன் 5 மில்லி தண்ணீர் கலந்து 1 கிலோ விதையுடன் கலக்க வேண்டும்.

விரல்களால் 1 சென்டி மீட்டர் ஆழத்திற்கு கோடுகள் இட்டு, 1 படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூட வேண்டும். மிதைல் பாரதியான் மருந்தினை விதைத்தவுடன் தூவி எறும்புகளிலிருந்து பாதுகாக்கலாம். நாற்றுக்களை தண்டு ஈயிலிருந்து காப்பதற்கு கார்போபியூரான் 3ஜி 600 கிராம் கலந்து தூவி விட வேண்டும். 30 சென்டிமீட்டர் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மண்ணில் நீர் உறிஞ்சிக்கொள்ளும் வரை மட்டும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். 6 மீட்டர் உள்ள பார்கள் 45 சென்டி மீட்டர் இடைவெளியில் அமைக்க வேண்டும். இடைவெளி 45*15 சென்டிமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.

வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியபடி உரங்கள் இட வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**ஜூன் 15ம் தேதிக்கு பதிலாக காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்துக்கு ஜூலை 1ம் தேதி தண்ணீர் திறக்க முடி**

ஈரோடு, : பவானிசாகர் அணையில் இருந்து காலிங்கராயன் பாசனத்துக்கு ஜூலை 1ம் தேதி முதல் தண்ணீர் திறந்து விட அரசுக்கு பொதுப்பணித்துறையினர் பரிந்துரை செய்துள்ளனர். பவானிசாகர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 15ம் தேதி முதல் காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படுவது

வழக்கம். காலிங்கராயன் அணைக்கட்டில் இருந்து மொத்தம் 15,743 ஏக்கர் பாசன நிலங்களுக்கு திறந்து விடப்படும் தண்ணீர் சுமார் 75 கிலோ மீட்டர் தூரத்திற்கு பாய்ந்து சென்று ஆவுடையார்பாறையில் நிறைவு பெற்று நொய்யல் ஆற்றில் கலக்கிறது. கடந்த ஆண்டு ஜூன் 15ம் தேதி முதல் இரண்டு போகமும் முழுமையான பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு கடந்த ஏப்ரல் 30ம் தேதியுடன் பாசனத்துக்கு தண்ணீர் நிறுத்தப்பட்டது. ஏப்ரல் 30ம் தேதியுடன் தண்ணீர் திறப்பு நிறைவு பெற்ற நிலையில் தொடர்ந்து காலிங்கராயன் வாய்க்காலில் கசிவுநீரும், சாக்கடை, தோல், சாயக்கழிவுநீர் ஓடியதால் வாய்க்கால் பராமரிப்பு பணிகளை துவங்க முடியாமல் பொதுப்பணித்துறை அதிகாரிகள் திணறினர்.

இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக தண்ணீர் ஓரளவு வடிந்து சென்ற பின்னர் வாய்க்கால் கரைகளை பலப்படுத்துவது, ஷட்டர்கள், மதகுகள் பராமரிப்பு பணிகள் போன்ற பணிகளில் தற்போது அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது மராமத்து பணிகள் சற்று மந்தகதியில் நடைபெறுவதால் விரைந்து இப்பணிகளை முடிக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இந்நிலையில் இந்த ஆண்டு காலிங்கராயன் வாய்க்காலில் ஜூன் 15ம் தேதிக்கு பதிலாக ஜூலை 1ம் தேதி முதல் தண்ணீர் திறந்து விட பரிந்துரை செய்துள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து பொதுப்பணித்துறையினர் கூறியதாவது: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 65.26 அடியாகவும், அணைக்கு 988 கனஅடி வீதம் மட்டுமே நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து தற்போது குடிநீர் தேவைக்காக மட்டும் 150 கனஅடி மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையில் தற்சமயம் 9 டிஎம்சி., நீர்இருப்பு உள்ளது. தற்போதைய நீர்இருப்பு திருப்திகரமாக இல்லை. நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை இன்னும் சில தினங்களில் துவங்கி விடும். இந்த பருவமழை சீசனில் 10 டிஎம்சி., வரையிலும் அணைக்கு நீர்வரத்தாகும் என

எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நீர்இருப்பை கொண்டு காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடியாது. ஏனெனில் தற்போது காலிங்கராயன் வாய்க்காலில் பராமரிப்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருவதால் இப்பணிகள் முடிய இம்மாத கடைசி ஆகி விடும். பராமரிப்பு பணிகள் முடிந்த பிறகே காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் திறக்க முடியும் என விவசாய சங்கங்களிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜூலை 1ம் தேதி முதல் தான் தண்ணீர் திறக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஜூலை 1ம் தேதி முதல் வரும் நவம்பர் 30ம் தேதி வரை தொடர்ந்து 6 மாதங்களுக்கு தண்ணீர் திறந்து விட பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொதுப்பணித்துறையினர் தெரிவித்தனர். இந்த ஆண்டு 15ம் தேதி முதல் காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் திறக்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**உலக சுற்றுச்சூழல் தினம்**

உடுமலை, : உடுமலை நகராட்சி மற்றும் எக்ஸ்னோரா தொண்டு நிறுவனம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினம் ராஜேந்திரா ரோடு அரசு மேல்நிலைப்பள்ளியில் கொண்டாடப்பட்டது. நகராட்சி தலைவர் ஷோபனா தலைமை வகித்து பேசினார். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த பேச்சு, பாட்டு, நாடகப்போட்டி நடத்தப்பட்டது. அதில் மாணவ,மாணவிகள் பங்கேற்றனர். குறுந்தகடும் வெளியிடப்பட்டது. கைகழுவுதல் குறித்த விஞ்ஞான விளக்கம் காண்பிக்கப்பட்டது.

விழாவில் பள்ளி தலைமையாசிரியர் முத்துக்குமார், அரசு மருத்துவமனை தலைமை டாக்டர் தமிழ்மணி, நேசக்கரங்கள் அறக்கட்டளை தலைவர் பால்நிலா, நாகராஜ், சுகாதார ஆய்வாளர்கள் இளங்கோவன், செல்வம், ஆர்.செல்வம், சிவகுமார், செல்வகுமார், எக்ஸ்னோரா திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகஜோதி, மோகனசுந்தரம், கவுன்சிலர்கள்

கதிஜா, ஷோபா, சகுந்தலா மற்றும் சின்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கூட்டுறவு ஆலைகளில் தேயிலைக்கு மாத விலை கிலோ ரூ.7 ஆக நிர்ணயம்**

மஞ்சூர், : மாவட்ட கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் பசுந்தேயிலைக்கு மிகவும் குறைந்தபட்மாக கிலோவிற்கு ரூ.7 ஆக நிர்ணயம் செய்துள்ளதால் விவசாயிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தில் மஞ்சூர், பிக்கட்டி, கிண்ணக்கொரை, எடக்காடு, மேற்குநாடு, மகாலிங்கா, கைகாட்டி, இத்தலார், கரும்பாலம், கட்டபெட்டு, எப்பநாடு, பிரான்டியர், பிதர்காடு, சாலீஸ்பரி மற்றும் பந்தலுார் ஆகிய 15 கூட்டுறவு தேயிலை தூள் உற்பத்தி ஆலைகளும் நுாற்றுக்கும் மேற்பட்ட தனியார் ஆலைகளும் இயங்கி வருகின்றன.

இதில் கூட்டுறவு ஆலைகளில் மட்டும் சுமார் 22 ஆயிரம் சிறு,குறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடம் இருந்து தினசரி கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒரு முறை குன்னுாரில் உள்ள இண்ட்கோசர்வ் நிறுவனத்தின் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

பின்னர் சம்பந்தபட்ட கூட்டுறவு ஆலைகள் மூலம் விவசாயிகளுக்கு அவர்கள் விநியோகித்த பசுந்தேயிலைக்கேற்ப தொகை பட்டுவாடா செய்யப்படுவது வழக்கம். இந்நிலையில் கடந்த மே மாதம் விவசாய உறுப்பினர்களிடம் இருந்து கூட்டுறவு ஆலைகளில் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயம் செய்வது தொடர்பான கூட்டம் குன்னுார் இண்ட்கோசர்வ் அலுவலகத்தில் நடைபெற்றது.

இண்ட்கோசர்வ் அதிகாரிகள், அனைத்து கூட்டுறவு தொழிற்சாலைகளின் தனி அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். இந்த கூட்டத்தில் பசுந்தேயிலைக்கான மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டு

அறிவிக்கப்பட்டது. இதன்படி மஞ்சூர், சாலீஸ்பரி, பந்தலூர் தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைக்கு மாத விலையாக கிலோவிற்கு ரூ.6 மற்றும் கூடுதல் விலை சேர்த்து ரூ.8 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. பிக்கட்டி, குந்தா(எடக்காடு), மகாலிங்கா, கைகாட்டி, கரும்பாலம், பிரான்டியர், பிதர்காடு ஆகிய தொழிற்சாலைகளில் கிலோ ஒன்றுக்கு ரூ.5.50 மற்றும் கூடுதல் விலை 2 ரூபாய் சேர்த்து ரூ.7.50 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.

கிண்ணக்கொரை, மேற்குநாடு, இத்தலார், எப்பநாடு உள்ளிட்ட தொழிற்சாலைகளில் கிலோவிற்கு ரூ.5 மற்றும் கூடுதல் விலை ரூ. 2 சேர்த்து ரூ.7 ஆகவும் மாதவிலை அறிவிக்கப்பட்டது.

மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் பெய்த பரவலான மழையால் பசுந்தேயிலை வரத்து பெருமளவு அதிகரித்துள்ளது. இதனால் கூட்டுறவு தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கொள்முதலில் கோட்டா முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக விவசாயிகளிடம் இருந்து தினசரி குறிப்பிட்ட அளவிலான பசுந்தேயிலை மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. தற்போது பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில் கூட்டுறவு தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைக்கு மாத விலை மிகவும் குறைவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் அதிருப்தி தெரிவித்தார்கள்.

**கருணாநிதி பிறந்தநாள் குன்னூரில் 92 பழ மரம் நடும் விழா**

குன்னூர், : திமுக தலைவர் கருணாநிதியின் 92வது பிறந்தநாளையொட்டி குன்னூரில் 92 பழ மரங்கள் நடவுதுவக்க விழா நடந்தது. இதற்கு இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் சிவக்குமார் தலைமை வகித்தார். நகர செயலாளர் ராமசாமி, மாவட்ட துணை செயலாளர் தமிழ்செல்வன், பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, தலைமை கழக பேச்சாளர் ஜாகீர் உசேன், இளைஞரணி நகர

அமைப்பாளர் பத்மநாபன், துணை அமைப்பாளர்கள் மன்சூர், சாதிக்பாஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் திமுக மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக் பழ மரக்கன்றுகளை நடவு செய்து நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். மேலும் மாவட்டம் முழுவதும் 92 ஆயிரம் மரக்கன்றுகளை நடவு செய்தும், வீடு வீடாக சென்று 1 லட்சம் பழ மரக்கன்று வழங்குவது என உறுதி மொழி எடுக்கப்பட்டது. இதில் அவைத்தலைவர் தாஸ், துணை செயலாளர்கள் முருகேஷ், சாந்தாசந்திரன், மணிகண்டன், மார்டின், முரளி, மூர்த்தி, முருககுமார், சேகர், ஜெகநாதன், சரவணன், காவேரி, நாகராஜ், கணேஷ், மீனாட்சி, சுந்தரம் மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.